குமரப் பெருமானின் நேரடி நெறிப்படுத்தலில் சமய வளர்ச்சி கருதி
இவ் வெளியீட்டிதழ் உதயமாகியது.

இந்துசமய அற்புதங்கள்

புதியவை 2016

ஸ்ரீ வாணி வெளியீட்டகத்தின்
அற்புதங்கள் வெளியீட்டு வரிசையில் 8 வதும்
ஆத்மீகப் பணியில் 20வது இலவச வெளியீடுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்

மயிலணி சிவன் தந்த வரம்	– சிவஸ்ரீ சோ. சந்திரசேகரக்குருக்கள்	06
நல்லூரான் தந்த சுகவாழ்வு	– திருமதி ஜெ. குலசேகரி	07
புத்திரபாக்கியம் அருளிய அற்புதம்	– திருமதி ந. ருஷாந்தினி	08
சந்நிதியானின் அனுக்கிரகம்	– திருமதி ஜெ. குலசேகரி	09
மொன்றியல் திருமுருகன் அருள்	– திருமதி ச. வேதநாயகி	10
சித்தன்கேணி வைரவரின் அருள்	– திருமதி க. செல்வராணி	11
வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மனின் அற்புதம்	– சதிஸ்காந் ஜெகதீஸ்வரி	12
மறவன்புலோ நாகதம்பிரானின் புதுமை	– திருமதி வி. பரமேஸ்வரி	13
உயர்வைத் தந்த கன்னாதிட்டி காளியம்மன்	– திருமதி இ. இரட்ணகீதா	14
பிணிகளைத் தீர்த்த பிரான்ஸ் முருகன்	– திருமதி. பாலகௌரி நடேசன்	15
வல்லை முனீஸ்வரனின் அருளாட்சி	– த.விக்கினேஸ்வரன் ஐயர்	16
மாங்கல்ய பாக்கியம் தந்த வைரவர்	– திருமதி உ. வினோதினி	17
குருநாதசுவாமி தந்தவாழ்வு	– திருமதி தயாநிதி பாலசுந்தரம்	18
காளியம்மன் தந்த மங்கலவாழ்வு	– திருமதி ச. பரமேஸ்வரி	19
யாழ் மகாலக்ஷ்மி கோவில்	– குமரன் தங்கராஜா	20
காரைநகர் ஞான வைரவரின் அற்புதம்	– திருமதி பா. உஷாதேவி	21
ஒற்றைக்கால் வைரவரின் அற்புதம்	– தயாநிதி சற்குணராசா	23
தமிழ் மக்களின் தலைவன்	– வலம்புரி	24

எழுத்தாளர், தொகுப்பாளர்:- சி. சிவகுமாரன் 0770432796

Writer & Editer :- S. Sivakumaran, Jaffna, Sri Lanka.

வெளியீடு :- ஸ்ரீ வாணி வெளியீட்டகம், யாழ்ப்பாணம்.

கணனி, அச்சுப்பதிப்பு :- போஸ்கோ பதிப்பகம் – நல்லூர்.

அச்சிட்ட பிரதிகள் :- எண்ணாயிரம் (8,000)

இதயக் கோவிலில் வசித்திடும் உன்னையே
எப்படி மறப்பேன் முருகா!
கஷ்டமே வந்தாலும் கைதூக்கி விடுவாயே
கண்கண்ட தெய்வமே குமரா! முருகா!!
என் சிந்தையிலே என்றுமிருப்பவனே – ஐயா!
ஒளிகாட்டி, வழிகாட்டி தெளிவு தந்திடுவாய்

பிறரது பாராட்டுக்கும், பழிக்கும் செவிசாய்த்தால்
மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது.

– சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசயம்.....!
மெத்த உண்டு.....!

எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே!
அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம்
அது ஆதலாலே அதிசயம் மெத்த உண்டு.

(எந்நாளும்...)

வேதாந்தம் சித்தாந்தம் கற்றதனால் என்ன?
வேடிக்கைக் கதைகள் பேசினால் என்ன?
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமல் போமே!

(எந்நாளும்...)

சத்தியம், பொறுமை, சாந்தம், அடக்கம்,
நித்தியம், அநித்தியம், தெரியும் நிற்குண
பக்திசெய் உத்தமர் பரவும் நல்லூரில்
நித்தியம் வந்துபார்த்தால் முத்தி நிச்சயமே!

(எந்நாளும்.....)

–தவத்திரு. யோகர்சுவாமிகள்–

முகநூலிலிருந்து:

Aiya Murugathas (06-07-2016)

தயவு செய்து, கடவுளின் படத்தைப் போட்டு, இதை 20, 30 பேருக்கு அனுப்பினால் 1 செக்கன், 1மணித்தியாலத்தில், ஒரு நாளைக்குள் நல்ல செய்தி வரும் எனப் போடாதீர்கள். இப்படி தப்பான தகவலைப் போடும் உங்களால் தான் மதம்மாறுகிறார்கள். மற்றைய சமயத்தில் இருப்பவர்கள் மதம் மாறு கிறார்களா??? சிந்தித்து செயல்படுங்கள். எது நடக்க இருக்கிறதோ அது நன்றாகவே நடக்கும். உங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யுங்கள். எல்லாம் நல்லபடி நடக்கும்.

மதம் மாறினால்தான் கடவுள் ஆசீர்வதிப்பார் என்றால்
உண்மையில் அவர் கடவுள் இல்லை, கட்சித் தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுரை

அடியேன் அன்புநிறை அடியவர்களின் அழைப்பின் நிமித்தம் 01.06.2016 அன்று ஆத்மீக பயணமாக சுவிற்சலாந்திற்கும், பிரான்சிற்கும் சென்றேன். சுவிசில் எந்த ஆலயத்திற்கு முதலில் செல்லவேண்டுமென்ற கேள்வி மனதில் எழுந்த நிலையில் இறைவனைத் தியாணித்தேன். முகப்பினிலே பாம்புப் புற்று வணக்க நிலையில் அமைந்திருக்கின்ற ஒரு சதுரமான விஸ்தீரமான கட்டடத்திலே அம்பாள் நிற்கின்ற நிலையில் கொழுகொண்டு அருள்வழங்கும் ஆலயத்தைக், காட்சிப் படுத்தி, அங்கே அடியேன் நின்று வணங்குவதாக உணர்ந்து கொண்டேன்.

இலங்கை இந்தியாவிலே தான் ஒரு சில கோவில்களில் ஆலயச்சூழலில் பாம்புப்புற்று வணக்க நிலையில் இருப்பதைக் கண்டிருக்கின்றேன். சுவிற்சலாந்தில் எப்படி பாம்புப்புற்று உருவானது என்ற ஐயத்துடன் அந்த ஆலய விபரத்தை பற்றி என்னைச் சந்திக்க வந்தவர்களிடம் கேட்டேன். 03.06.2016 வெள்ளிக்கிழமை "விஷ்ணு துர்க்கை அம்பாள்" என்ற ஆலயத்திற்கு அடியேனை அழைத்துச் சென்றார்கள். இவ் ஆலயம் சூரிச்சில் -ஹின்வில் என்ற இடத்தில் உள்ளது. உண்மையிலே பாம்புப்புற்றுப் போன்று செம்மண்ணினால் புற்றும், இதைச்சூழ கருங்கல்லிலாளான சற்ப விக்கிரகங்களும், மேலே மகுடியும் வைத்தபடி வடிவமைத்திருப்பதைக் கண்டு வியந்தேன். இதனருகில் நவக்கிரகங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. வெளிநாடுகளில் அதிகமான ஆலயங்களில் வெள்ளிக் கிழமைகளில், மற்றும் விசேட தினங்களில்தான் பூஜை நடைபெறும். ஆனால் இவ் ஆலயத்தில் தினசரி பூசைகளும், அன்னதானமும் நடைபெறுகின்ற சிறப்பைக் கண்டு கொண்டேன். மதியநேரப்பூஜை, அம்பாள் தரிசனம் பெற்றபின் இவ் ஆலய ஆதினகர்த்தாவும், குருவுமாகிய சிவஸ்ரீ சரவணபவானந்தக் குருக்கள் ஐயாவிடம் (சர்மா ஐயா) உரையாடவேண்டுமென்ற ஆவல் மேலிட்டது.

எங்கள் சைவசமயத்தை வளர்த்தெடுக்க வேண்டுமென்று தலைமைச் செயலகமோ, உலகில் சைவசமயம் சார்ந்த அரசாங்கமோ, அரச உதவிகளோ அற்ற நிலையில் வளர்த்தெடுக்கப்படாமல், தானாகவே சைவசமயம் வளர்ச்சி அடைகின்றதென்றால் சாதாரண மக்களும், "உலகிலேயே உயர்வான சமயம்" எதுவென்பதை ஊகித்துக்கொள்ள முடியும் என்பதற்கமைய,

சைவத்தின் மகத்துவம் பற்றியும், புலம்பெயர் நாடுகளில் சைவசமயத்தின் வளர்ச்சி எப்படி இருக்கின்றதென்பது பற்றியும், இப்புத்தகத்திற்கு ஆசியுரை வழங்கும்படியும் அடியேன் ஐயாவிடம் கேட்டதிற்கிணங்க நீண்டநேரம் அடியேனுடன் ஐயா அவர்கள் அன்புடன் உரையாடி வழங்கிய ஆசியுரை அடுத்து பிரசுரமாகின்றது. இவ் ஆசியுரையை தன் கோவிலைக் காட்டி அடியேனை அழைத்து, அம்பாளே சிறப்புரை தந்தது போன்ற உணர்வு அடியேனிடம்.

சக்தி மைந்தன்

சி.சிவகுமாரன்

("இந்து சமய அற்புதங்கள்" தொகுப்பாளரும் வெளியீட்டாளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிற்சலாந், சூரிச், கின்வில் ஸ்ரீ விஷ்ணு துர்க்கை அம்பாள் ஆலயகுரு சிவஸ்ரீ சரவணபவானந்தக் குருக்கள் வழங்கிய கருத்துரை

அன்புக்குரிய சிவகுமார் ஐயா அவர்களே! நான் உங்களை எங்கள் அம்பாளின் ஆலயத்தில் முதன் முதலில் பார்த்த பொழுது எனக்கு ஒரு மிக அழகான புத்தகத்தை தந்திருந்தீர்கள். "இந்து சமய அற்புதங்கள்" அப்படி என்ற ஒன்று. அதில் மிக அற்புதமான செய்திகள் இடம்பெற்றுள்ளன. மிகவும் வரவேற்கத்தக்க விடயம். "காலத்தாற் செய்த உதவி ஞாலத்தில் பெரிது" என்று வள்ளுவர் மிகவும் அழகாக கூறியிருக்கின்றார். உதவி என்று பார்க்கும் பொழுது நாம் சார்ந்த மதம், நாம் பிறந்து வளர்ந்த மதம் அதற்கு எந்தவித குறைவும் கிடையாது. என்றும் பிரபஞ்சத்திற்குரிய ஒரு மதம். ஆனால் மற்றையோரால் சிறுமைப்படுத்துவது போன்று அப்பப்ப தோன்றும்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் கூட அனல் வாதம், புனல் வாதம் என்று சமயத்தை காப்பாற்றுவதற்காக பல போராட்டங்களை நிகழ்த்தி உள்ளனர். அது போன்று நீங்களும் இன்று இருக்கக்கூடிய கலியுகத்தில் இந்த மதமாற்றம் என்று சொல்லக்கூடிய நோய்க்கு ஒரு மருந்தாக இது போன்ற புத்தகங்களை வெளியிடுவது உண்மையிலேயே வரவேற்கத்தக்க ஒரு விடயம். இதுவந்து எப்படி இருக்க வேண்டும் என்றால், ஒரு மதம் எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்றால் பிரம்ம, சத்திரிய, வைஷ்ணவ, சூத்திர என்று சொல்லக்கூடிய நான்கு நிலைகளிலே பிரம்மம் அறிவு பூர்வமாகவும் அரசு பூர்வமாகவும் பொருளாதார ரீதியாகவும் உற்பத்தி பூர்வமாகவும் ஒருங்கிணைத்து ஒரு மதத்தினுடைய தன்மையை வளர்த்து எடுக்க வேண்டுமானால் இந்து சமயம் என்ற பிரிவில் தெரிந்தோ தெரியாமலோ அறிந்தோ அறியாமலோ ஒரு துரதிஸ்ரவசமாக "மதச் சார்பின்மை" என்கின்ற ஒரு சித்தாந்தத்தை எல்லா அரச நிலைகளும் கையில் வைத்து கொண்டு நமக்கு யாரும் உதவி செய்வது கிடையாது. அது வேறு விடயம். அந்த விடயத்தை சொல்லப் போனால் மிக விரிவாகப் போய்விடும். ஆனால் இன்று இருக்கக்கூடிய இந்த கால கட்டத்தில் நாங்கள் அற்புதம் என்று சொல்லும்பொழுது முதலில் இதுவே மிகப்பெரிய அற்புதமாகச் சொல்ல முடியும்.

கத்தோலிக்கர்களும், வேறு மத பிரிவினர்களும் மிகப் பெருந்தொகையாக வாழ்கின்ற சுவிட்சலாந்திலே 26 இந்து ஆலயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்று சொன்னால் இதுவே இறைவனுடைய மகா அற்புதம். இதுவந்து ஈழத் தமிழ்மக்கள் தங்களுடைய புலம்பெயர் வாழ்வில் சுவிட்சலாந்தாக இருக்கலாம், அல்லது ஜேர்மனியாக இருக்கலாம், அல்லது பிரான்சாக இருக்கலாம். அல்லது இங்கிலாந்தாக இருக்கலாம் அல்லது கனடாவாக இருக்கலாம் இன்னும் பற்பல நாடுகளில், தாங்கள் விருட்சமாக உலகெங்கும் மாறி இந்து சமயத்தின் வளர்ச்சியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலோங்கச் செய்கின்றார்கள். இது எங்களுடைய மூதாதையர்கள் எங்களுக்கு போட்டு வைத்த மிகப் பெரிய ஒரு விதை சமயம், விரதம், அனுட்டானம் இவற்றையெல்லாம் மிக அழகாகப் போட்டு வைத்துள்ளார்கள். அந்த அடிப்படையில் இவற்றின் அடித்தளம் யாருக்கு என்று கேட்டால் உலகத்திலே முதற்பங்கு ஈழத் தமிழருக்குத்தான். இது ஆணித்தரமாகப் பதிவாகப் பதியப்பட வேண்டும். இந்தியாவில் இருக்கக்கூடியவர்கள் சரி, தமிழ் நாட்டில் இருந்தாலும் சரி அல்லது இந்து சமயத்தில் பல பிரிவுகளாக இருக்ககூடிய டெல்லியிலோ அல்லது வேறு பலமொழி பேசுபவர்களாக இருந்தாலும் கூட தொழிலின் நிமித்தம் மேலத்தேய நாடுகளுக்கு வந்தாலும் அவர்கள் தமது தொழிலோடு நின்றார்களே தவிர, விவேகானந்தருக்குப் பிறகு யாரும் புறப்பட்டதாகத் தெரியவில்லை.

ஆனால் இன்றைக்கு ஈழத்தமிழன் ஒவ்வொருத்தரும் விவேகானந்தராக வாழ்ந்து கொண்டிருக்கின்றான். எவ்வளவு துன்பமான சூழலிலும் தான் சார்ந்த நாட்டிலே தான் வாழக்கூடிய பகுதிகளிலே தங்களால் முடிந்த பகுதிகளிலே ஒரு கட்டிடமாக இருக்கலாம் அல்லது தங்களால் முடிந்தவரையிலே முதன் முதல் ஆலயங்களை அங்கே அமைத்துக்கொண்டு, குறிப்பாக கனடாவை எடுத்துக் கொண்டால் அங்கே கணக்கிட முடியாத ஆலயங்கள் உள்ளன. சமயத்தின்பால் அத்தனை ஆளுமை ஈழத்தமிழனுக்கு அதிகமாக இருக்கிறது. இதனைப் பெருமையோடு நாம் பேசிக்கொள்ள வேண்டும்.

எங்களுடைய நாட்டில் அதாவது சுவிட்சலாந்தில் அமைந்துள்ள - விஷ்ணு துர்க்கை அம்மன் ஆலயத்தில், அதாவது நான் இருக்க கூடிய இந்த ஆலயம், இதில் நான் ஒன்றும் அம்பாளுக்கு இல்லை, அம்பாள்தான் என்னை அழைத்திருக்கிறாள். அம்பாள் எனக்கொரு வாய்ப்புத் தந்திருக்கிறாள். இந்த மாதிரி ஒரு பூஜைகள் பார்ப்பதற்கு சமய அனுட்டானத்தோடும் எங்களுடைய குழந்தைகளுக்கு இதைப்பற்றி எடுத்துச் சொல்வதற்கு, இது ஒரு வாய்ப்போடு அம்பாள் இதை வைத்திருக்கின்றார். இது வந்து கடவுள் தந்த வாய்ப்பு. இறைவன் ஒவ்வொரு மனிதனுக்கும் வாய்ப்புக்கள் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறான். யார் யார் எப்படி வாழவேண்டும் என்று சொல்லி, அனைத்தும் இறைக்குள் உட்பட்டது என்று சொல்லி நேர்மறை, எதிர்மறை என்று பார்த்தால் இரண்டுமே இறைவன்தான். உதாரணமாக ஒரு விக்கிரகத்தை எடுத்து கொள்ளுங்கள், இன்றைக்கு நீங்கள் அம்பாளைப் பார்த்தால் இந்த அம்பாள் வந்து முதன் முதல் பார்க்கின்ற பொழுது மிகப் பெரிய ஒரு பாராங்கல், கருங்கல் மாதிரி இருந்தா. அப்பொழுது அந்த கருங்கல்லிலே வேண்டத்தகாத பகுதிகளை செதுக்கிச் செதுக்கி எடுத்து உங்களுக்கு என்ன அழகான அம்பாளை வடித்து எடுக்கின்றோம். இதற்கு காரணம் என்னவென்று சொன்னால் இதுதான் எது இந்த வேண்டத்தகாத பகுதிகள் என்பதும் நமக்கு வேண்டதக்கவை காரணம் அது வேண்டத்தகாத பகுதிகள் என்பதை உணர்ந்து அதை விலக்கி கொண்டதினாலை அந்த விக்கிரகம் நமக்கு கிடைத்தது. இப்பொழுது அந்த வேண்டத்தகாத பகுதிகள் நான் போகமாட்டேன் என்று இறுக ஒட்டிக்கொண்டு இருக்குமாயின், இருந்தால் எங்களுக்கு அம்பாள் கிடைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பாவோ, அதேபோலத்தான் எங்களுடைய உடம்பும்சரி, எண்ணங் களாக இருப்பினும் சரி நல்லது கெட்டதனால் ஆக்கப்பட்டதாக இருந்தாலும் வேண்டத்தகாதவைகளை நீக்கி நல் வழியில் வாழ்வை அமைத்துக்கொள்வோம்.

மேலும் எங்கள் ஆலயத்தை எடுத்துக்கொண்டால் அம்பாளினுடைய அழைப்பு இருந்தால் மட்டுமே இங்கு வரலாம். அதாவது தீர்வு உள்ளவர்கள் மட்டுமே வரலாம். இன்றைய காலகட்டத்தில் அவளுடைய அற்புதம் சொல்வதாக இருந்தால் அதிகம் சொல்லலாம். அம்பாளின் அற்புதத்தை அவரவர் தேடி அறிந்து வருவதினால் தான் எங்கள் ஆலயத்திற்குப் பெருமை இருக்கின்றது. "அம்பாளே! நீ தெய்வம். உனக்குத் தேவையான கட்டமைப்பை நீதான் உருவாக்க வேண்டும். உன்னை யார் தடுக்க" என்று நான் கையெடுத்துக் கும்பிட வேண்டும். இது சரணாகதி. அந்த ஒரு வாழ்க்கை அவள் கூட நான் வாழ்வதினால் தான் எந்த நாளும் காலை 07.00 தொடக்கம் இரவு 09.00 மணி வரை அம்பாளினுடைய ஆலயத்தை அம்பாளை தரிசிப்பதற்காக திறந்து வைத்திருக்கின்றோம். சாமியைப் பூட்டி வைக்க முடியாது. இறை என்ற உணர்வு கூட மனித வாழ்க்கைக்குரித்தானது. அதில் ஆச்சாரம் என்ற மிகப்பெரிய போர்வையில் அடாவடித்தனம் பண்ண எனக்கு இஷ்டம் இல்லை. இறைவனைக் கும்பிட ஒரு திறந்த மனம் வேண்டும். இந்தக் கோயிலுக்கு எந்த நேரம் போனாலும் அம்பாளைக் கும்பிடலாம் என்ற திறந்த மனம் இருக்கின்ற பொழுது அதுவே மிகப்பெரிய ஒன்று.

மதமாற்றம் என்கின்ற கருத்து வருகின்ற பொழுது அவர்களுக்கு கூட நான் ஒரு கருத்துச்சொல்ல விரும்புகிறேன். கையில் வெண்ணெய்யை வைத்துக் கொண்டு எங்கோ நெய்க்கு அலைந்து திரிவது மாதிரி, இன்பம், துன்பம் என்பது பிரபஞ்சத்தில் அடக்கப்பட்டது. அது ஜீசஸ் உள்ளேயும், கிருஷ்ணருக்குள்ளேயும், ஈசனுள்ளேயும், புத்தருள்ளேயும், பொதுவாக எல்லோருக்கும் இது அடங்கி இருக்கின்றது. எல்லோருக்கும் உள்ள பொதுவான விதிதான் இன்பமும், துன்பமும். இங்கு கூடத் துன்பப்படுகிறீர்கள், எங்களிடம் வந்தால் துன்பமே இராது.. **"இங்கு கூட, அங்கு குறைய"** என்று சொல்லி உங்களுக்குள்ளே நீங்கள் மாறுபட்ட கருத்துக்களோடை அலைந்து திரிகின்றீர்கள். காலத்தை தேவை இல்லாமல் போக்காதீங்க. எங்கையாவது ஏதாவது ஒரு நம்பிக்கை உள்ள இறைவனை இதயத் தூய்மையோடு வழிபடுங்கள். மற்றைய சமயங்களை தாழ்வுபடுத்தி பிரசாரம் செய்வதை உங்கள் இறைவனே ஏற்றுக்கொள்ளமாட்டார். இது சர்வ நிச்சயம்.

இந்து சமய அற்புதங்கள் நூல் மூலமாக இன்னமும் தொடர்ந்து மென்மேலும் ஆன்மீக அற்புதங்களை வெளியீடு செய்யவேண்டும் என்று வாழ்த்தி அம்பாளைப் பிரார்த்திப்பதோடு, இந்த மலரில் என்னுடைய கருத்துக்களும் வரவேண்டும் என்ற அம்பாளின் சித்தத்திற்கு உட்பட்ட உங்களுக்கு என்றும் என் நன்றிகள்.

– பிரம்மஸ்ரீ சரவணபவானந்தக் குருக்கள்

கண்ணிலே அன்பிருந்தால், இதயத்திலே இரக்கமிருந்தால்
கல்லிலே தெய்வம் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலணி சிவன் தந்த வரம்

சென்றவருடம் ஒருநாள் சனிப் பிரதோஷபூஜை நிறை வடைந்து நானும் வேறு இரண்டு அன்பர்களும் ஆலயவாசலில் கதைத்துக் கொண்டிருந்தோம். பிரதோச பூஜையில் பங்குபற்றிய மதிப்பிற்குரிய திரு.சிவகுமாரன் அவர்கள் "இந்துசமய அற்புதங் கள்" எனும் புத்தகத்தை தந்துவிட்டு, "இப்புத்தகத்தில், சுவிஸ்சில் இருக்கும் அன்பரொருவருக்காக இவ்வாலயத்தில் சட்ட விளக் குகளில் சுடரேற்றி வழிபாடாற்றியதால் அவரின் நோய் சுகமடைந்த அற்புதமும் இருப்பதாகக்" கூறினார்.

அவ்வேளையில் என்னுடன் இருந்த அன்பர்களில் ஒருவர், "எமது ஐயாவுக்கும் ஒரு மனக்கவலை இருக்கிறது, அவருக்கு நாற்பது வயதாகியும் இன்னமும் திருமணபலன் கிடைக்கவில்லை" என சிவகுமாரன் ஐயாவிடம் கூறியபோது, அவர் சிவனை பிரார்த்தனை பண்ணியபின், "இவ்வாலயத்தில் பல தலைமுறையாக வழிவழியாக சுடரேற்றிவந்த பெரிய குத்துவிளக்கு ஒன்று தற்போது மறைபொருளாக இருக்கின்றது. இந்த குத்துவிளக்கைத் தேடியெடுத்து, சுடரேற்றி வந்தால் திருமணம் நிறைவேறும் என்று சிவனார் சொல்வதாகக்" கூறினார். "அப்படியொரு குத்துவிளக்கு இங்கிருந்து இல்லாமல் போனதாக எனக்குத் தெரியவில்லை" என்று நான் கூறிவிட்டு, வீட்டுக்குச் சென்றபின் எனது தாயாரிடம் இதுபற்றி வினாவினேன்.

யுத்தகாலத்தில் அந்நேரம் பூஜைப்பணியாற்றிய எனது தந்தையாரிடம் சிலர் வந்து இந்தக் குத்துவிளக்கை இரவலாகத் தரும்படி வற்புறுத்தியதால், ஆலய தீபத்தை ஆசூச அபர நிகழ்வுக்கு வழங்குவது தகாத செயலென உணர்ந்த தந்தையார் அக் குத்துவிளக்கை வேறோர் இடத்தில் மறைப்புச் செய்துவிட்ட விடயம் தாயார் கூறி எனக்குத் தெரியவந்தது. பல வருடங்களாக மறைப்புச் செய்திருந்த குத்துவிளக்கை மிக்க மனமகிழ்வுடன் எடுத்துவந்து அதனைச் சுத்தம் செய்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் சுடரேற்றி வந்தேன். இப்படியாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சுடரேற்றி வருகையில் ஐந்தாவது வெள்ளிக்கிழமை தீபம் ஏற்றியபின் எனக்குத் திடீரென திருமணம் நிச்சயமாகியது. இப்பலன் கைகூடிய மகிழ்வில், அந்த குத்துவிளக்கிற்கு புடவைசாத்தி மஞ்சள் சாதம் வைத்து குங்கும அர்ச்சனை செய்தபின் திருமணநாள் நிச்சயம் செய்து திருமணம் நிறைவேறியது. இப்போது மேலும் சிவாச்சார்ய அபிஷேகம் பெற்று குருக்களாக மங்களகரமாக மகிழ்ச்சியுடன் குருப்பணியுடன் வாழ்ந்து வருகின்றேன். இந்த வரத்தை நல்கிய எமது குலதெய்வமாகிய சுன்னாகம் மயிலணி சிவபெருமானை நன்றியுடன் பணிந்தேத்தி, இந்த வழிபாட்டு முறையினை எமக்கு அறியத்தந்த அன்பர் திரு.சிவகுமாரன் அவர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த அன்பினையும், நன்றியினையும் மீண்டும் மீண்டும் கூறிக்கொள்கின்றேன்.

– சிவஸ்ரீ சோ.சந்திரசேகரக் குருக்கள்
சுன்னாகம் மயிலணி சிவன் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூரான் தந்த சுகவாழ்வு

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட எனது பெயர் திருமதி. ஜெ.குலசேகரி (வயது 58) 1986ல் எனது கணவர் காலமாகியபின், 1990ல் இடம்பெயர வேண்டிய துயரநிலையும் ஏற்பட்டது. இத்துடன் தீராத ஆஸ்துமா நோயாலும் கடுமையாக அவஸ்தையுற்று வந்தேன். கிழமைக்கொரு தடவைப்படி யாழ் போதனா வைத்தியசாலையில் ரெவலேசர் பிடித்தாலும் குறையாது. அந்நேரம் நல்லூர்க்கந்தனின் வாசலுக்கு வந்து எனது தொடர்கதையான கவலைகளைக் கூறி கண்ணீர் வடித்தேன். உடனேயே தன் ஆலய அயலிலேயே எனக்கு வீடுகிடைக்கச் செய்தார் முருகப்பெருமான். இல 41/89 வைத்தியசாலை முன் ஒழுங்கை, செம்மணிவீதி, நாயன்மார்க்கட்டில் வசிக்கத் தொடங்கினேன். இதன்பின்பு தொடர்ந்து நல்லூரானிடம் எனது ஆஸ்துமா என்னும் தீராத நோயையும் சுகப்படுத்தென்று கண்ணீரால் வேண்டுதல் செய்துவந்த போது, ஒருநாள் ஒரு பெரியவர் கோவில் வாசலில் கூறினார், "அம்மா! ஆறு வருடங்களுக்கு கந்தஷஷ்டி விரதம் அனுஷ்டியுங்கள். உங்கள் வருத்தம் சுகம்வரும்" என்றார். "நித்தமும் குளிசைகள் பாவித்துக்கொண்டே இருக்கிறேன். நான் எப்படி விரதம் பிடிப்பது" என்று மறுத்தபோது, "இல்லை அம்மா! கடவுளின் சக்தி பெரியது. இரவுமட்டும் ஒரு ஆகாரம் உண்டு கந்தப்பெருமானிடம் உபவாசமிரு" என்று அவர் கூறியபோது எனக்கு உற்சாகம் வந்தது. இறைபக்தியோடு விரதத்தைத் தொடங்கினேன். இன்றும் இழுப்புநோய் வருவதில்லை. குளிசை பாவிப்பதுமில்லை. நல்லூரான் தந்த சுகம் என்றும் பேரின்பம்.

-திருமதி.ஜெ.குலசேகரி-

வியக்கவைத்த பாதயாத்திரை

இவ்வருட கதிர்காம மஹோற்சவ பாதயாத்திரைக் குழுவினர் பாதயாத் திரையை 2016.05.15 அன்று ஸ்ரீ செல்வச் சந்நிதியிலிருந்து ஆரம்பித்தபோது எடுத்த படத்தை பின்பக்க அட்டைப்படத்தில் காணலாம். இப் பாதயாத்திரையில் ஒருசில இளையோரைத் தவிர மிகப் பெரும்பாலானோர் அறுபது வயதிற்கும் மேற்பட்டோர் என்பதை சிந்தையிலெடுத்து ஆராயும்போது கந்தப்பெருமானின் பேரருள் அளவிடற்கரியதாக இருக்கின்றது. பண்ணிசை, நாம சங்கீர்த்தனங்களுடன் மழையிலும் வெய்யிலிலுமாக ஏறக்குறைய 740 கி.மீ தூரத்தை அதுவும் வயோதிபத் தாய்மார் கைத்தடியுடனே நடக்க முடிந்துள்ளது. தொடர்ந்து ஐம்பது நாட்கள் நடந்து 2016.07.04ந் தேதியன்று கதிர்காம புண்ணிய ஷேத்திரத்தைச் சென்றடைந்துள் ளார்கள் என்றால், எம்பெருமான் மீதுள்ள ஆறாத பக்தியை அளவிடவும் முடியுமோ? "அவனருளாலேதான் அவன்தாள் வணங்க முடியும்" என்பதற்கிணங்க, எக்கணமும் கந்தப் பெருமானின் பாதுகாப்பும்-கண்காணிப்பும் - துணைநின்றது என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. இதில் சகோதர மொழி பேசும் பெரும்பாண்மை இனத்த வரான N.W பெர்ணாண்டோ என்ற சைவமார்க்கத்தைக் கடைப்பிடிக்கின்ற அடியவர் தெஹிவளையிலிருந்து வந்து சந்நிதியிலும், மற்றும் ஆறு சிங்கள சகோதரர்கள் உகந்தையிலும் இணைந்து கொண்டமை வியப்பே. **-சி.சிவகுமாரன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திர பாக்கியம் அருளிய அற்புதம்

நீர்கொழும்பைச் சேர்ந்த எனது பெயர் ருஷாந்தினி நகுலேஸ்வரன். எங்களுக்கு 2013ம் ஆண்டு தை மாதம் திருமணமாகி அடுத்த இரண்டு மாதங்களிலேயே குழந்தைப் பாக்கியம் கிடைத்தது. மூன்று மாதங்களில் "குழந்தையின் வளர்ச்சி நின்றுவிட்டது" என்று குழந்தையை இல்லாமல் செய்யச் சொன்னார்கள். நாங்களும் இதற்கிணங்கிச் செய்துவிட்டு மனவேதனையில் இருந்தோம். 2 வருடங்களாக குழந்தைப் பாக்கியம் கிடைக்கவில்லை. 2014ம் ஆண்டு புரட்டாதி மாதம் சந்நிதி முருகன் தேர்த்திருவிழாவில் "இந்து சமய அற்புதங்கள்" எனும் புத்தகம் என் தந்தைக்கு கிடைத்தது. நான் வாசித்தேன். சிவகுமார் ஐயா யார், எங்கு இருப்பார் எப்படி தொடர்பு கொள்வது என்று யாழ்ப்பாணத்தில் உள்ள சித்தியிடம் விசாரித்தேன். இதன் பிரகாரம் நான் சந்தோஷத்துடன் ஐயாவுடன் தொடர்பு கொண்டேன்.

"முகப்பிலே வேப்பமரம் இருக்கிற அம்மன் கோவில் ஒன்று உங்கள் அயலில் இருக்கிறதா" என்று கேட்டார். "ஆம் சிங்கமாகாளி அம்மன் கோவில் ஒன்று இருக்கிறது" என்று கூறினேன். அந்த அம்மனுக்கு செவ்வாய்க்கிழமைகளில் விரதம் அனுஸ்டித்து பால் அபிஷேகமும், தினமும் பூக்கள் கொண்டு சென்று வழிபட்டு வர அம்மன் ஒரு சில மாதங்களில் பலன் தருவதாகவும் கூறினார். அத்துடன் ஒரு சுவரும் ஒரு வேலியும் சந்திக்கும் இடத்தில் பாம்புப்புற்று ஒன்று இருக்கிறதா என்றும் கேட்டார். நான் அப்படி ஒன்று இருப்பதாக எனக்கு தெரியவில்லை என்று கூறினேன். விவசாயம் செய்யும் இடம் ஒன்றிற்கு பக்கத்தில் இருப்பதாக கூறி அந்த புற்றிற்கு பால் ஊற்றி தீபம் ஏற்றி வழிபடுமாறு கூறினார். நான் இதை வீட்டில் கூறிய போது எனது கணவரின் தங்கைக்கு அந்தப் புற்று இருக்கும் இடம் தெரியவந்தது. நாங்கள் அங்கு சென்று பார்த்தபோது ஐயா சொன்ன மாதிரியே அந்தப் புற்று அமைந்திருந்தது. ஆனால் எங்களுக்கு அந்த புற்றுக்கு பால் ஊற்றி தீபம் ஏற்றும் வசதி கிடைக்கவில்லை. இதை ஐயாவிடம் தெரிவித்தேன். பூப்போட்டு வழிபடுமாறு கூறினார். நான் ஐயாவிடம் ஐப்பசிமாத இறுதியில் கதைத்தேன். கதைத்த நாளில் இருந்தே காளியம்மனுக்கு பால் அபிஷேகமும், பூ வழிபாடும், புற்றுக்கு பூ போட்டும் வழிபட்டு வந்தோம். புற்றுக்கு பால் ஊற்ற கிடைக்காததால் காளி அம்மன் கோவிலில் உள்ள நாகபூசணி அம்மனுக்கு பால் ஊற்றி வந்தேன். 3 மாதங்களின் பின் நான் கர்ப்பமடைந்தேன். நவம்பர் மாதம் 11ம் திகதி எனக்கு பெண் குழந்தை பிறந்தது. ஜனவரி மாதம் 23ம் திகதி யாழ்ப்பாணம் சந்நிதி கோவிலுக்குச் சென்று மொட்டை போட்டு காது குற்றினோம். 26ம் திகதி ஐயாவிடம் சென்று குழந்தையைக் காட்டி ஆசீர்வாதம் பெற்று வந்தோம்.

தங்கள் மதத்திற்கு மதம்மாறி வந்தால்தான் இப்படியான மனக்கவலைகள் அகலும், கேட்டவரம் கிடைக்கும் என்று வலிந்து திணிக்கப்படும் மதமாற்ற பிரசாரங்களுக்குப் பதிலாக, சக்திமிக்க எங்கள் சமய நம்பிக்கையினால் எந்த வரத்தையும் அடைந்து கொள்ளலாம் என்பதனை நிலைநிறுத்தி நாங்கள் பெற்ற பலனை எழுதி எங்களால் முடிந்த பண உதவியையும் புத்தக வெளியீட்டிற்கும் வழங்கி உள்ளோம். **– திருமதி ருஷாந்தினி நகுலேஸ்வரன்–** 0774908937

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியானின் அனுக்கிரகம்

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட எனது பெயர் திருமதி.ஜெ.குலசேகரி. வயது 58. எனது தாயாரின் ஊர் வல்லை நாற்சந்தி, உடுப்பிட்டி. எங்கள் வழிவழியான குலதெய்வம் நாற்சந்தியிலுள்ள நாகதம் பிரானாகும். நான் சிறுவயதில் என் தாயாருடன் வாழ்ந்து வருகையில், எங்கள் குலதெய்வம் நாகதம்பிரானை பேரனான சடையனார் பூஜைகள் வைத்து ஆதரித்துவந்தார். இக்கோவிலை எம்பெருமானின் கட்டளைப்படியே கட்டுவதற்கு ஆரம்பித்தேன். எனது மகளின் திருமண ஆயத்தங்கள் நடைபெற்று வந்தபோது சில தடைகள் ஏற்பட்டன. அந்நேரம் நாகதம்பிரான் வந்து கனவிலே உணர்த்தினார். "நான் குளிருக்குள் இருக்கின்றேன். என்னைக் கவனிப்பார் இல்லை" என்கின்ற அசரீரி கனவிலே கேட்டது. இதன் உட்கருத்தை உணர்ந்து கொண்ட நான் கோவில் கட்டும் பணியை ஆரம்பிப்பதில் காலதாமதமாகியது. பிள்ளைகளின் திருமண பலன் தடை, வெளிநாடு செல்வதற்கும் தடைகள் சூழ்ந்தபோது, சர்ப்ப தோஷங்களை நிவர்த்தி செய்யும்படி ஜோதிடர்கள் கூறினார்கள். இதன்பிரகாரம் கோயில்களுக்குச் சென்று செம்பாம்பு, கரும்பாம்பு கொடுத்து, தாணங்கள் வழங்கி இவற்றை நிறைவுசெய்து, எங்கள் நாக தம்பிரான் கோவிலடியில் உள்ள சிறியதாயார் வீட்டில் தங்குவதற்கு வந்தபோது கோவிலடியிலிருந்து ஒரு குரல் கேட்டது. "நில்! என் கடமையை முடித்துவிட்டுச் செல்" எனக்கு உடம்பு வியர்த்து பதற்றமாக இருந்தது. கணவரும் இல்லாத நிலையில் எப்படி நான் ஆலயத்தை கட்டுவது என்கிற தயக்கம். பிறகு யோசித்தேன். என் சித்தியின் மகன் காந்தராசா இக்கோயில் தொண்டுகளைச் செய்து தற்போது சுவிஸ்நாட்டில் இருக்கிறார். கோவில் கட்டுவது தொடர்பாக அவருடன் தொடர்பு கொண்டேன். அப்போது அவர் கூறினார் "அக்கா! நல்ல காரியம், நீங்கள் முன்வந்து என்னிடம் தொடர்பு கொண்டது சந்தோசம். கோயிலைக் கட்டுவம்" எனக் கூறியவுடன் எனக்கு உற்சாகம் வந்தது. ஆலயத்தைக் கட்டத் தொடங்கிய பின் பலதடைகள் வந்து சூழ்ந்த போதும், எம்பெருமான் அருளால் ஆலய கட்டுமானப்பணி நிறைவடைந்தது.

கும்பாபிஷேகத்தை நிறைவேற்றுவதில் மீண்டும் பெரும் நெருக்கடிகளும், முட்டுக்கட்டைகளும் ஏற்பட்டன. 2000.05.01ம் திகதி கும்பாபிஷேகம் செய்வதென நாள் நியமித்தும் கும்பாபிஷேகத்துக்கு ஆம் என்ற குருக்களும் மறுத்துவிட்டார். அன்றையதினம் கவலையுடன் நான் சந்நிதிக்குச் சென்று முருகா! ஆலய உரிமை மற்றவர்களுக்கும் இருந்தாலும், நாகதம்பிரான் கேட்டதற்கிணங்கவே "கோவிலைக் கட்டினேன்" என வணங்கிவிட்டு வீட்டுக்கு வந்து உறங்கிய பொழுது சந்நிதி முருகன் காட்சி தந்தார். சிறு பையனாக மஞ்சள் வேட்டி உடுத்து திருநீற்றுக் குறி அணிந்தபடியே சந்நிதி றோட்டால் முருகப்பெருமான் வர, மக்கள் கூட்டம், அவருக்குப் பின்னால் வந்து எங்கள் ஆலயத்தில் கும்பாபிஷேகம் நிகழ்வது போன்று கனவு கண்டேன். எனக்கு உற்சாகம் வந்தது. மீண்டும் குருக்களுக்கு நோட்டீஸ் குடுக்கச் சென்றேன். அவரும் மறுப்புத் தெரிவிக்காமல் ஆம் என்றார். நாங்கள் மகிழ்வுடன் அமைதியாக வந்து சந்நிதியான் அருளால் கும்பாபிஷேகத்தை நிறைவுடன் செய்தோம்.

-திருமதி ஜெ.குலசேகரி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொன்றியல் ஸ்ரீ திருமுருகன் அருள்

நெல்லண்டை வீதி, தும்பளையை பூர்வீகமாக கொண்ட நாங்கள் நீண்டகாலமாக கனடா மொன்றியலில் வசித்து வருகிறோம். எனது உறவினரான பத்மாசினி மூலம் சிவகுமாரன் ஐயாவுடன் தொடர்பை ஏற்படுத்த முடிந்தது. எனக்கும் நிறைவான வருமானம் வந்த போதும் வீட்டில் நின்மதி இல்லாமல், வருத்தம், காரிய தடைகள் மற்றும் வேறு பிரச்சனைகளாலும் நின்மதி இழந்து நின்ற வேளையில் ஐயாவிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். எனது வீடு பற்றியும் எனது கஷ்டங்கள் பற்றியும் ஐயா கூறியவற்றை எனது உறவினரான ஒருத்திக்கு கூறினேன். அவள் உங்களுக்கு ஒன்றும் இல்லை சும்மா இருங்கோ ஒரு பரிகாரமும் செய்யத் தேவையில்லை என்றாள். அதன் பின்னர் ஒரு வருட காலமாக இத்துன்பங்கள் மனக்கஷ்டங்கள் தொடர்ந்து கொண்டே இருந்தது.

2015ம் ஆண்டு கந்தசஷ்டி பூஜைக்கு மொன்றியல் ஸ்ரீ திருமுருகன் கோயிலுக்குச் சென்றேன். அப்போது எனது கவலைகளை கண்ணீர் மல்க முருகனிடம் முறையிட்டுப் பிரார்த்திதுக் கொண்டிருக்கும் வேளையில், எனது அருகில் பன்னிரண்டு வயது நிம்பிய சிறுமி வந்து அருள் வாக்கு உரைத்தாள். எனக்கு தூக்கிவாரிப்போட்டது. இச் சிறுமி விசேட தினங்களில் பெற்றோருடன் ஆலயத்துக்கு வருவாள். துன்ப மிகுதியால் அல்லல்படும் ஒரு சிலருக்கு வாக்குரைப்பதுண்டு, அன்றைய தினம் இந்த சிறுமி உரைத்த அருள்வாக்கே எனக்கு திருப்பத்தை ஏற்படுத்தியது.

ஒரு வருடத்துக்கு முன்பு சிவகுமாரன் ஐயா எனது வீட்டின் குறைபாடுகள் பற்றி கூறியது போன்று இச்சிறுமியும் அதே மாதிரி வாக்குக்கூறிவிட்டு, ஸ்ரீலங்காவில் இருக்கும் சிவகுமாரனும் எனது அம்பாளின் அருள் இருக்கும் எனது பிள்ளைதான், அவரால் உனது பிரச்சினை தீர்க்கப்படும். அவரையே மீண்டும் தொடர்பு கொள்ளும்படி கூறினாள் அச்சிறுமி. எனக்கு மொன்றியல் திருமுருகனின் அருளை எண்ணி வியப்பாக இருந்தது. மீண்டும் ஐயாவுடன் தொடர்பு கொண்ட போது,

ஐயா கூறினார் முன்பு நீங்கள் வணங்கிவந்த பிள்ளையாரை கடந்த 4 ஆண்டுகாலமாக மறந்து விட்டாய். ஆலய நிர்வாகம் சார்ந்த ஒருவரிடம் மனக்குறை காரணமாக மொன்றியல் கற்பக விநாயகரை மறந்து விட்டாய். விநாயகரிடம் சென்று மன்னிப்புக் கேட்டு கும்பிட்டு பூஜைகள் செய்யும்படி கூறினார். வாரத்தில் ஒரு நாளாவது சென்று வழிபட்டு வரும்படி கூறினார். விநாயகரிடம் மன்னிப்பு கேட்ட பிறகே வீட்டு குறைகள் நீக்கும் பூஜை முறைகள் பற்றிக் கூறி அதைப் பூரணமாக நிறைவேற்றித் தந்தார். இதன் பிறகு நானும் சுகமடைந்து மனக்கவலைகளும் தீர்ந்து நின்மதியடைந்தேன்.

2016 மாசி மாதம் எனது மகள் சாளினிக்கு குழந்தை கிடைத்த பின் பிள்ளையும் தாயும் நோய்வாய்ப்பட்டனர். வைத்தியசாலையில் குழந்தையை கண்ணாடிப் பெட்டியில் பராமரித்து வைத்தியம் செய்தும், தாய்க்கு ஒருகால் நடக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத நிலையிலும் பெரும் நோய்க்குள்ளாகினார். அப்போதும் சிவகுமாரன் ஐயாவிடம் தொடர்பு கொண்ட பொழுது அவர் குலதெய்வத்தைப் பற்றிப்பிடித்து வழிபாடு, வேண்டுதல் செய்யும் முறைபற்றிக் கூறினார். பருத்தித்துறையில் இருக்கும் நெல்லண்டை பத்திரகாளி அம்பாளுக்கு 2016 பங்குனி 3ம் திங்கள் பால் அபிஷேகம், குழைசாதம் என பெரும் நேர்த்தி ஒன்றை செய்தவுடன் இங்கே கனடாவில் இவர்கள் சுகம் அடைந்தனர்.

இங்கே மொன்றியல் துர்க்கை அம்பாளுக்கு நான் வைத்த நேர்த்தியை நிறைவேற்றுவதற்காக 19.06.2016 அன்று காலில் முள்ளு மிதியடியணிந்து நேர்த்தியை நிறைவு செய்தேன். இந்த நேர்த்தியை நிவர்த்தி செய்வதற்கு நான் பயந்து கொண்டிருந்த பொழுது கனடாவில் இருக்கும் தர்மாகரன் என்பவரை அம்பாள் எனக்கு கனவில் காட்டியதன் பிரகாரம் அதன்படியே அவரிடம் தொடர்பு கொண்டு இந்த அருளாளரின் வழிபடுத்தலினாலும், அம்பாளின் அருளினாலும் நேர்த்திக்கடனை நிறைவு செய்தேன். முருகப்பெருமானினதும் அம்பாளினதும் திருவிளையாடல்கள் இவற்றை எல்லாம் சொல்லுவதற்கு எம்மிடம் வார்த்தைகளே இல்லை.

-திருமதி.ச.வேதநாயகி -

சித்தன்கேணி வைரவரின் அருள்

வட்டு வடக்கு, சித்தன்கேணியில் வசிக்கும் திருமதி. செல்வராணி கனகரத்தினம் ஆகிய நான் எனது மகன் இதயகுமாரன் அவர்கள் படித்துவிட்டு வேலை கிடைக்காமல் கஸ்ரப்படுவதைக் கண்டு கவலையடைந்து, சிவகுமாரன் ஐயாவுடன் இதுபற்றி தொலைபேசியில் கேட்டேன். "உங்கள் அயலில் ஒரு குட்டி வைரவர் கோவில் இருக்கின்றது. 41 நாட்களுக்கு தினமும் சென்று தொண்டு புரிந்து வணங்குங்கள். மகனுக்கு வேலை கிடைக்கும்" என்றார். அவர் கூறியதுபோல் மிகச் சிறியதான கோவில். ஓர் அம்மாதான் பூஜை ஆற்றுவார். இக் கோவிலில் பூக்களுடன் தினமும் சென்று வழிபட்டுவந்தேன். 38வது நாள் மகனுக்கு அரச உத்தியோக வேலைக்கான கடிதம் கிடைத்தது. யாழ் பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் உதவியாளராக 41ம் நாள் கடமையை ஆரம்பித்தார். வைரவர் அருள்புரிந்ததை எண்ணி நான் மிகவும் சந்தோஷமாக உள்ளேன். என்றென்றும் வைரவப் பெருமானைக் கையெடுக்கின்றேன்.

க.செல்வராணி

பிழைதிருத்தம்

சென்ற வருட (2015) "இந்து சமய அற்புதங்கள்" நூலில் "யாழ் வண்ணை வைத்தீஸ்வரனின் அருட்கடாட்சம்" என்கிற தலைப்பில் கேதீஸ்வரக்குருக்கள் ஐயா அவர்கள் எழுதி பிரசுரமாகிய ஆக்கத்தில் 6ம்பக்கத்தில் **புஸ்கரணி நீரினால் சுவாமிக்கு அபிஷேகம் செய்து** எனும் வசனத்தை **திருமஞ்சனக்கிணற்று நீரினால் சுவாமிக்கு அபிஷேகம் செய்து** என்று வாசிக்கவும். (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மன் துணை

வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் அற்புதம்

எனது மகன் தர்ஷன் (வயது 15) கடந்த மூன்று வருடங்களாக அவருக்குத் தொடர்ந்து தலையிடி. நானும் அவரை பல தடவைகள் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றேன். எதுவும் சரிவரவில்லை. இறுதியாக வைத்தியர் பார்க்கும் போது கூறினார், "நீங்கள் கொழும்புக்குச் சென்று உங்கள் மகனுக்கு MRI எடுத்துப் பாருங்கள். அப்பதான் தெரியும் தலையில் என்ன பிரச்சினை இருக்கென்று."

நானும் கடந்த 29.12.2014 அன்று கொழும்பு தனியார் வைத்தியசாலைக்கு (நவலோகா) மகனைக் கூட்டிச்சென்றேன். அங்கே இருந்த வைத்தியர் மகனைப் பரிசோதித்து மருந்து தந்துவிட்டு "இரண்டு கிழமைக்கு பிறகு வாருங்கோ" என்று கூறினார். நாங்களும் மீண்டும் இரண்டு கிழமைக்கு பின்பு போனோம். அப்பதான் MRI எடுத்தார்கள். அதன் பின்பு ஒரு மாதத்திற்குப் பிறகு வாருங்கள் என்று சொன்னார்கள். நாங்களும் வந்து மீண்டும் ஒரு மாதத்திற்குப் பின் சென்றோம். ரிப்போட்டைப் பார்த்துவிட்டு கூறினார்கள், தலையில் ஒரு பாரிய பிரச்சினை இருக்கு. மருந்து தருகின்றோம். ஒரு மாதத்திற்கு பிறகு வாருங்கோ என்ன செய்யலாம் என்று சொல்கின்றோம் என்றார்கள். சத்திரசிகிச்சைதான் தலையில் செய்யப் போகின்றார்களோ என்ற மனப்பயம் ஒருபுறம், இதுவரை பல இலட்சம் செலவழித்துவிட்டோமே என்ற கவலை, இத்தனைக்கும் எனக்கு என்ன செய்வது என்று தெரியாத நிலையில் ஊருக்கு வந்து என் அம்மா முத்துமாரியிடம் போனேன். என் அம்பாளிடம் மன்றாடினேன். "தாயே என் மகனுக்கு ஒன்றும் வரக்கூடாது. நீதான் அருள்புரிய வேண்டும்" என்று அம்பாளிடம் அழுதுவிட்டு வந்தேன். மீண்டும் ஒரு மாதத்திற்குப் பிறகு கொழும்புக்குச் சென்றேன். அவர்கள் "மீண்டும் ஒரு தடவை MRI எடுப்போம்" என்று சொன்னார்கள். நானும் எனது மகனைக் கூட்டிச்சென்றேன்.

வைத்தியர், "ரிப்போட்டில் இப்ப ஒரு நோயும் இல்லை என்று வந்திருக்கு. நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம். மருந்தொன்றும் தேவையில்லை. போய் வாங்கோ" என்று சொன்னார். எனக்கு முத்துமாரி அம்பாளின் அருளை எண்ணி மெய்சிலிர்த்தது. நாங்களும் சந்தோஷமாக ஊர்வந்து என் அம்பாளிடம் போனோம். அழுது வணங்கி "என் தாயே! என் மகனைக் காப்பாற்றி விட்டாய்" என்று கூறி அன்புடன் பொங்கல் வைத்தேன்.

சசிஸ்காந் - ஜெகதீஸ்வரி,
கொண்டல்கட்டை, வல்வெட்டித்துறை.

சட்டங்கள், திட்டங்கள் சமைத்த தெய்வம்!
கொட்டமழப்போரைக் குந்தவைக்கும் தெய்வம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறவன்புலோ, ஆலடி நாகதம்பிரானின் புதுமை

நாங்கள் தற்போது வெள்ளவத்தை பெரேரா லேன் 2/6, 8B கொழும்பில் வசித்து வருகின்றேன். எமது பூர்வீக இடம் மறவன்புலோவாகும்.

2014ஆம் ஆண்டு நல்லூர் முருகன் தேர்த்திருவிழாவிற்குப் போனபோது சிவகுமாரன் ஐயாவின் அற்புதங்கள் புத்தகம் எனது மகளுக்குக் கிடைத்ததால் என்னிடம் தந்தார். நான் அற்புதம் புத்தகத்தை அடிக்கடி வாசிப்பேன். நான் நல்லூர் முருகனிடத்தும் போய் நேர்த்தி செய்து வருவேன். எனது முதல் மகனுக்கு முதுகு எலும்பில் நோவு இருப்பதாகவும், அதனால் எனக்கு கவலையாய் இருந்தது. அதற்கு அவரின் பெயரால் இப்புத்தகப்பணிக்கு வழங்கவென 5000/= ரூபாய் நேர்ந்து சாமி முன் வைத்தேன். அந்தப் பணத்தை அனுப்புவதற்கு சிவகுமாரன் ஐயாவின் தொடர்பு வெகு நாட்களாகக் கிடைக்கவில்லை. 2015 ஆனி மாதம் முருகனருளால் அவரின் தொடர்பு கிடைத்தது. அவரிடம் வங்கி நம்பரைக் கேட்டபொழுது நேரில் வரும்படி சொன்னார். அப்பொழுது ஜேர்மனியிலிருந்து வந்திருந்த எனது இளைய மகன் விஜயகுமார் ஐயாவை சந்தித்து தனது சகோதரர்களின் பிரச்சனைகைள் பற்றிக் கதைத்தார். அத்துடன் கொட்டாஞ்சேனையில் ஆரிசிரியையாகக் கடமையாற்றும் தனது சகோதரி விஜயரதணியின் திருமணம் பற்றியும் கேட்டார். ஐயா கண்களை மூடி தியாணித்துவிட்டு மறவன்புலோவில் உள்ள எனது தந்தையாரின் பரம்பரை கோவில் இருக்கிறது என்று சொல்லி, அதை புணருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்றும் சொன்னார். ஐயா சொன்னதும் மகன் எங்கள் பரம்பரை கோவில் எந்தகோவில் என்று தொலைபேசியில் என்னிடம் கேட்டார். நான் எனது தந்தையாரின் கோவில் முருகன் கோவில் என்றும் அங்கே நாகதம்பிரானும் வைரவரும் பரிவாரமூர்த்திகளாக இருக்கின்றன என கூறினேன்.

அதற்கு ஐயா அவர்கள் அப்படியில்லை ஒரு பெரிய விருட்சமுள்ள வயல் புட்டியில் ஒரு சிறு கோவில் இருப்பதாகச் சொன்னார். அப்பொழுது தான் மறவன்புலோ ஆலடியில் உள்ள நாகதம்பிரான் கோவிலை நினைத்தேன். அக்கோவிலையே திருத்தி அமைத்து கும்பாபிஷேகம் செய்யும்படி சொன்னார். அதற்கமைய புன்னாலைக்கட்டுவன் பிள்ளையார் கோவில் குருவான கெங்காதரக் குருக்கள் ஐயாவை அழைத்து நிலையம் எடுத்தோம். 2015 கார்த்திகை மாதம் நாகதம்பிரானை பாலஸ்தானம் செய்து புதிய கோவில் கட்டினோம். 18.03.2016 அன்று நுணாவில் பிள்ளையார் கோவில் குரு கஜராஜ குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நிறைவேறியது. அதன்பின் எங்கள் மகள் விஜயரதணிக்கு தடைப்பட்ட இவரின் திருமணமும் நிறைவேறியுள்ளது. மற்றைய பிள்ளைகளின் பிரச்சனைகளையும் எங்கள் குலதெய்வம் நாகதம்பிரான் தீர்த்து வைப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தொடர்ந்து நாகதம்பிரானுக்கு பால்பழம் வைத்து பூஜைகள் செய்து வணங்கி வருகிறோம்.

- வி. பரமேஸ்வரி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வைத் தந்த கன்னாதிட்டி காளியம்பாள்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட என் கணவர் கடந்த 15 வருடங்களாக பிரபலமான நகைமாடத்தை நடாத்தி வருகிறார். அந்தக் காலங்களில் நின்மதியையும் தொழில் வளர்ச்சியையும் மட்டுமே கண்டுவந்த நாம், கடந்த நான்கு வருடங்களாக எதை ஆரம்பித்தாலும் வீழ்ச்சியும், குடும்பத்தில் நின்மதியின்மை, உடல் வருத்தம், சோர்வு எனப் பல்வேறுபட்ட துன்பங்களை அனுபவித்து, இறைவனையே நம்பி வாழும் எமக்கு இப்படியும் சோதனை வருமா என நாம் வணங்கி வரும் கன்னாதிட்டி காளியம்மனை நினைத்து வருந்தாத நாட்களே இல்லை என்று தான் சொல்லலாம். இந்த வேளையில்தான் கும்பிட்ட கடவுள் எதிரேவந்தது போல் நமது சிவகுமாரன் ஐயாவின் இந்துமத அற்புதங்கள் எனும் நூல் கடந்த வருடம் நல்லூர்க்கந்தனின் தேர்த்திருவிழா அன்று எனது கையில் கிடைத்தது. நாமும் அவரை சந்திக்க வேண்டும் என்ற ஆவலோடு முயற்சித்தோம். ஆனால் நாம் நினைத்தபடி அவரை உடனடியாக தொடர்பு கொள்ள முடியவில்லை. என்றாலும் நாம் முயற்சியைக் கைவிடாது தொடர்பை ஏற்படுத்தப் பாடுபட்டு ஒருவாறு அவரை நேரடியாக சந்திக்கும் வாய்ப்பை எமக்கு அம்மன் தந்திருந்தார். அவர் எமது துன்பங்களை வீடியோப் படம் பார்த்தது போல் கூறி, எல்லாவற்றிற்கும் தான் வழிகாட்டுவதாகவும், பக்கத்தில் இருக்கும் காளியம்மனுக்கு பொங்கல் வைத்துவிட்டு வரும்படியும் கூறினார்.

அவர் கூறியது போல் அம்மனுக்குப் பொங்கல் வைத்து வழிபட்டு அடுத்த நாள் ஐயாவை சந்திக்கலாம் என இருந்தோம். ஆனால் அன்று இரவு அம்மன் தனக்கு பச்சை நிறத்தில் சாறிவாங்கித் தரும்படியும் அதை உடுத்தினால் தனது தரிசனம் எப்படி இருக்கும் என்பதையும் காட்டி எனது கனவில் தோன்றி மறைந்தார். ஆனால் இது ஏன் இப்படி நடந்தது என விளக்கம் தெரியாதபடியால் நான் எவருக்கும் கூறவில்லை. அடுத்தநாள் ஐயாவிடம் சென்றோம். அவர் கண்ணை மூடித் தியாணம் பண்ணிக்கொண்டு "இரவு உங்களிடம் அம்மன் கனவில் தோன்றினாவா" எனக் கேட்டார். நான் திகைத்துப்போய் கனவில்கண்ட காட்சியைக் கூறினேன். அவர் சொன்னர், "தான் கனவில் கேட்டபடி பச்சை நிற சாறி அணிவித்துதான் பொங்கல் வைக்கும் படியும் எமது இல்லத்தில் குற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் அதை நிவர்த்தி செய்து உங்களைப் பழைய நிலைக்கு கொண்டு வருவதாக பச்சைக்கொடி காட்டி அம்மன் தன்னிடம் உறுதியளிக்கிறார்" எனச் சொன்னார்.

அவர் சொன்னபடி நமது இல்லத்திற்கு சிவகுமாரன் ஐயா வந்து அம்மன் சொன்னபடி குற்றங்களை நீக்கிவிட்டு, உங்கள் இல்லத்திற்கு பாம்புவரும் என்றும் வந்தால் அதை ஒன்றும் செய்யக்கூடாது என்றும் கூறினார். அவர் கூறியது போல் இரண்டு கிழமைக்குள் பாம்பு எமது வளவிற்குள் வந்துவிட்டு வந்த வழியே திரும்பிப் போய்விட்டது. இந்துமத வழிபாட்டு முறைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உயர்வு நிலைக்கு உரியது என்பதை சிவகுமாரன் ஐயா மூலம் உணர்ந்து கொண்டது மட்டுமல்ல, எமது வாழ்வு உயர்வடைய சிவகுமாரன் ஐயாவைப் போல் தெய்வீக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி உடைய குருவின் வழிகாட்டல் அவசியம் என்பதையும், பக்தியை அதாவது இறைவனின் அருளை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து செயல்படவேண்டும் என்பதையும் எமக்கு தமது தெய்வீகப் பணிமூலம் சிவகுமாரன் ஐயா உணர்த்திவிட்டார். அத்துடன் எமது வீழ்ச்சி கண்ட தொழில் நின்மதியடைந்து உடல் வருத்தங்கள் யாவும் எமக்கு படிப்படியாக முன்னேற்றம் கண்டுகொண்டு வருகிறது. யாவும் இறைவன் செயல். அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பதை ஐயாமூலம் எமக்கு காளியம்மன் உணர்த்திவிட்டார்.

திருமதி.இரட்ணகீதா இராஜேஸ்வரன்

எங்களின் பிணிகளைத் தீர்த்த பிரான்ஸ் முருகன்

ஏழாலை தெற்கு சுன்னாகத்தை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி.பாலகௌரி நடேசன் என்னும் பெயருடைய நான் திருமண பந்தத்தின் மூலம் பிரான்சில் வசித்து வருகின்றேன். கடந்த சில வருடங்களாக வைத்தியம் செய்தும் மாறாத வருத்தங்களினாலும், கணவரின் தொழில் ஒழுங்கின்மை மற்றும் பல பிரச்சினைகளினாலும் தொடர்ச்சியாக துன்பப்பட்டுக் கொண்டிருந்தேன். ஏழாலை, ஏழு கோவில் அத்தியடி முருகன் ஆலய கும்பாபிசேக விழாவன்று எனது அக்காவான இந்திரா ஆசிரியைக்கு "இந்து சமய அற்புதங்கள்" என்னும் 2 புத்தகங்கள் கிடைத்தன. அதில் ஒன்றை எனக்கு அனுப்பி இருந்தார். நான் அதனை வாசித்து விட்டு ஐயாவிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். நான் இங்கு வந்ததில் இருந்து இப்ப உள்ள பிணிகள் பற்றியும் கூறினார். வீட்டில் நின்மதியில்லை. உடல் முழுவதுமிருந்த நோய்கள் பற்றியும் கூறினார். ஐயாவிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டதன் பின்னர் பூஜைமுறை வழிகாட்டலினால் சிறிதளவு குணமடைந்திருந்தேன்.

அதன் பிறகு இவ்வருடம் யூன் மாதம் 8ம் திகதி பிரான்சில் எங்கள் வீட்டிற்கு சிவகுமார் ஐயா வந்தார். வந்தவுடன் முதலாவதாகக் கேட்டது, என்னவெனில் "நீங்கள் வாரந்தோறும் சென்று வழிபட்டுவந்த முருகனை ஏன் மறந்தீர்கள்" எனக் கேட்டார். எங்கள் வீட்டிலிருந்து 2 கீலோ மீற்றர் தொலைவில் செல் என்ற ஊரிலிருக்கும் முருகன் கோவிலுக்கு வருத்தம் துன்பங்களினால் இரண்டு வருடங்களாகப் போகாமல் விட்டுவிட்டோம் எனக் கூறினோம்.

நிறைவான பூஜையாற்றி வீட்டிலுள்ள பிரச்சினைகளையும், உடம்பிலிருந்த வருத்தங்களையும் நீக்கிவிட்டார். அன்றைய தினமிரவுப் பூசைக்கு ஐயாவையும் அழைத்துக் கொண்டு சென்று மீண்டும் செல் முருகனை வழிபட ஆரம்பித்தோம். இதன்பின் எங்களுடன் பகைத்துத் தூரநின்ற உறவுகள் எல்லாம் எங்களுடன் தொடர்பு கொள்ளத் தொடங்கினார்கள். அன்னிய நாட்டில் தனித்து வாழ்ந்த எங்கள் வீட்டிற்கு உறவுகள் வரத்தொடங்கினார்கள். முருகன் அருளால் புத்தகம் கிடைத்த பலன் எங்கள் பிணிகள் தீர்ந்தன. முருகனுக்கும் அம்மனுக்கும் நன்றியை செலுத்துகிறோம்.

திருமதி. பாலகௌரி நடேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லை முனீஸ்வரப் பெருமானின் அருளாட்சி

வடமராட்சியின் நுழைவாயிலாக அமைந்த வல்லைவெளியில் காவல் தெய்வமாக தான்தோன்றிக் கோவில்கொண்டு அருளாட்சி புரிகின்றார் வல்லை முனீஸ்வரன். போக்குவரத்து வசதிகுறைந்த முற்காலத்தில் மக்களின் கஷ்ரங்களைப் போக்குவதற்காக முனீஸ்வரன் என்ற நாமத்தைத் தாங்கிய இறைவனாக மருதமரத்தைத் தன் கோயிலாகக் கொண்டு எழுந்தருளினார். இவ் ஆரம்ப காலத்தில் எம்பெருமான் வியப்பூட்டும் திருவிளையாடல்களை நிகழ்த்தியதால் அக் காலத்தில் இரவுப் பயணங்களைக் குறைத்துக் கொண்டனர் பயணிகள்.

உடுப்பிட்டி வீரபத்திரர் ஆலய அயலில் வசித்துவந்த முருகுப்பிள்ளை கந்தையா அவர்கள் இப்பெரு வெளியில் பசுக்கூட்டங்களை மேய்த்து வருபவர். இவருக்கு இறைவன் காட்சி கொடுத்து, "இரவில் வெளிச்சமின்றி இருக்கின்றேன்" என்று கூறினார். இதன்பின் தினமும் மாலைநேரத்தில் மருதமரத்தின் மேற்குப்புற வெளியில் அமைந்திருந்த கேணியில் நீராடி, திருவிளக்கிட்டு - சூடமேற்றி வழிபடத் தொடங்கினார். இதன்பின் ஆலய கட்டடமும் அமையப் பெற்றது. இவரின் சந்ததியினரால் காலப்போக்கில் அடியார்களின் பங்களிப்புடன் எம்பெருமானுக்கு வருடந்தோறும் மடை, பொங்கல் என்பன சிறப்பாக நடைபெறுகின்றன. வைகாசி விசாக பூரணை தினத்தின் பின்பு வருகின்ற அபரபக்க திங்கட்கிழமையில் மேற்படி நிகழ்வு நடைபெறுகின்றது. முனீஸ்வரன், பிள்ளையார் என அருகருகேயுள்ள இக் கோவில்களில் தினமும் ஒரு காலப்பூசை நடைபெற்று வருகின்றது. எம் பெருமானிடம் வந்து வணங்கி துன்பநிவர்த்திகளை அடியவர்கள் பெற்றதனால் பொங்கல், அன்னதானம், பூசைகள் என்பனவற்றை யாழ் குடாநாட்டு மக்கள் மட்டுமல்லாமல் வெளிமாவட்ட அடியவர்களும் அடிக்கடி வந்து நிறைவேற்றி முனீஸ்வரனின் அனுக்கிரகத்தைப் பெறுகின்றனர். இவ்வாலயத்தைத் தாண்டிச் செல்லும் சகல வாகனங்களும் நிறுத்தி எம்பிரானை வழிபடத் தவறுவதில்லை. இதுமட்டுமல்லாமல் எச் சமயத்தவரும் வழிபடும் ஒரு பொது வழிபாட்டு மையமாகி இவ்வாலயம் மிளிருவதைக் காணமுடிகின்றது. காவல்தெய்வமாக மருதடியில் வீற்றிருந்து அடியார்களுக்கெல்லாம் அருள்பாலிக்கும் முனீஸ்வரன்**"கண்டிப்பான, கருணையுள்ளம் கொண்டவர்"** என்பதை யான் ஈண்டு குறிப்பிட விரும்பு கின்றேன். இது எம்பிரானைப் பற்றி வழிபடவரும் அடியார் திருக்கூட்டத்தின் நாவிலிருந்து வெளிவரும் வாக்கியமுமாகும்.

முனீஸ்வரன், பிள்ளையார் இவ்விரு ஆலயங்களின் மறுகரையில் ஆஞ்சநேயர் ஆலயமும் அமைந்து இவ்விடம் சிறப்புப் பெறுவதுடன் சிறிது தூரத்தில் அண்மைக்காலமாக நாகம்மாளும் பாம்புப்புற்றாக தான்தோன்றியாக உருவாகி அதில் இரண்டு வெள்ளை நாகங்கள் குடியிருக்கின்றன. இவ்வழிபாட்டிற்கான தொண்டர்கள்- அடியார்களையும் அம்பாள் காட்சிகொடுத்து அரவணைத்து வழிபாடுகள் மேலோங்கிவருகின்றன. சிவனேயான முனீஸ்வரன் முதன்மையாக - வல்லைப் பிரதேசமே கிராமிய முறையிலான இந்து சமய பண்பாட்டு மையமாகி உருவெடுக்கின்றது.

முனீஸ்வரப்பெருமான் பூஜைப் பணியிலுள்ள

சிவத்திரு.த.விக்னேஸ்வரன் ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாலை இலந்தைகட்டி ஸ்ரீ பாதாள ஞான வைரவரின் மகிமை:

மாங்கல்ய பாக்கியம் தந்த வைரவப்பெருமான்

எனது பெயர் வினோதினி. மயிலங்காட்டில் வசிக்கும் எனது அப்பா பெயர் ஆணந்தராசா. திருமண வயதை அடைந்த எனக்கு பெற்றோர் திருமணம் பேசினார்கள். ஆனால் ஒன்றும் கைகூடவில்லை. சோதிடர்களைக் கேட்டபொழுது சர்ப்ப தோஷம் இருக்கிறதென்றும் பரிகாரங்கள் செய்யச்சொல்லி பல தடவைகள் பரிகாரங்களையும் செய்து பார்த் தோம். ஆனால் திருமணம் தாமத மாகிப் போனது. குடும்பத்தவர்கள் எல்லோரும் கவலையுடன் இருந்த வேளை, நான் எனது அப்பாவின் குலதெய்வமான இலந்தைகட்டி வைரவர் கோவிலில் சிவகுமார் ஐயாவைச் சந்தித்தேன். மிகவும் வேதனையுற்று இருந்த எனக்கு ஐயா அவர்கள் நம்பிக்கையான ஆறுதல் வார்த்தைகள் கூறினார். "கிணற்றுக்குள் மறைந்திருந்த பாம்பை உனது அப்பா அடித்தாரா" என்றும் கேட்டார். நான் சிறுமியாக இருந்தபொழுது எங்கள் வீட்டுக் கிணற்றுக்குள் இருந்த சாரைப்பாம்பை அப்பா அடித்தது எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. அந்தப் பாம்பின் சாபம்தான் திருமணத்திற்கு தடை ஏற்பட்டுவிட்டது எனக்கூறி இதற்கான பரிகாரமும் கூறினார். வைரவர் ஆலய முன்றலில் ஒரு பெரிய வேப்பமரம் உள்ளது. அந்த மரத்தடியில் இருக்கும் பெரிய பாம்புப் புற்றுக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பால்வார்த்து சூடமேற்றி வழிபாடு செய்து வரும்படி கூறினார். ஆலய பிரதமகுருவான சிவஸ்ரீ பா.பாலமனோன் குருக்கள் அவர்கள் இவ் வழிபாட்டினை முன்னின்று செயற்படுத் தியமைக்கும் நன்றி கூறுகின்றேன். நான் இந்த ஒழுங்கில் அருச்சனைகள் செய்து வணங்கி பாலூற்றி வரும்போது, இந்த வருடம் பங்குனி மாதம் முதல் திங்களன்று திருமணத்திற்காக சம்பந்தக்கலப்பு நடந்தது. பின்னர் வைகாசி மாதம் திருமணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இனிது நடந்து, இணுவிலில் கடை நடாத்தும் எனது கணவருடன் இப்போது மகிழ்வுடன் வாழ்ந்து வருகிறேன். ஐயாவின் வாக்கு அமுதவாக்கு எனக்கூறி என்றென்றும் இலந்தைகட்டி வைரவரை நினைந்துருகி வணங்குகின்றேன்.

திருமதி.உ.வினோதினி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணைப்பந்தி குருநாத சுவாமி தந்த வாழ்வு

தையிட்டி, காங்கேசன்துறையை பிறப்பிடமாக கொண்ட எனது பெயர் திருமதி தயாநிதி பாலசுந்தரம். நாங்கள் தற்பொழுது கோண்டாவில் மேற்கில் வசித்து வருகிறோம். 1990ம் ஆண்டு இடப்பெயர்வின் போதும் அதன் பின்னரும் பல இன்னல்களையும் அனுபவித்தோம். மகளுக்கு திருமண வயது வந்தும் வரன் சரியாக அமையாமல் பல வருடங்களாக தடைப்பட்டுக்கொண்டே சென்றது. சொந்தமாக வீடும் இருக்கவில்லை. அதேசமயம் எனது கணவருக்கு திடீரென சுகவீனம் ஏற்பட்டு இருதய இரத்தக் குழாயில் அடைப்பு என வைத்தியர்கள் சொன்னதும் மிகுந்த மனக்கவலையுடன் ஆணைப்பந்தியிலுள்ள குருநாத முருகனிடம் சென்று வணங்கி வரும்போது சிவகுமார் ஐயாவை 2014 செப்டெம்பரில் சந்தித்தோம். உடனேயே அவர் "நீங்கள் மற்றவர்களுக்கு துன்பம் இழைக்காமல் வாழ்ந்து இதய சுத்தியுடன் குருநாத முருகனுக்கு பூப்போட்டு கற்பூரம் ஏற்றி வழிபட்டதை முருகன் ஏற்றுக்கொண்டு விட்டார் எனவும், உங்கள் வேண்டுதல்கள் அனைத்தும் நல்லபடியே நடக்கும் எனவும், இனிவரும் காலங்களில் முருகனுக்கு நெய்விளக்கு ஏற்றி வழிபாடு செய்யுமாறும்" கூறியதுடன், அத்தனை வேண்டுதல்களும் நிறைவேறியவுடன் பெரிய குத்துவிளக்கு வாங்கித் தருவதாக முருகனுக்கு நேர்த்தி வைக்கும்படி கூறினார். நாங்களும் நம்பிக்கையுடன் வீட்டுக்கு சென்றோம்.

கடந்த வருடம் (2015) ஆடி மாதம் கணவருக்கு Bypass சத்திர சிகிச்சை நடைபெற்று தற்போது சுகமாகவுள்ளார். மகளுக்கும் சென்ற மாதம் திருமண வாய்ப்பு கைகூடி நிச்சயிக்கப்பட்டது. இத் திருமண நிகழ்வை திருநெல்வேலி பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நடாத்தவுள்ளோம். முருகனருளால் தெல்லிப் பளையில் உள்ள எமது சொந்தக் காணியில் அரசாங்க உதவியுடன் வீடுகட்டும் அனுமதியும் கிடைத்துள்ளது. எங்கள் விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவேற்றித்தந்த குருநாதசுவாமியின் கும்பாபிஷேக காலத்தில் இயன்ற பங்களிப்பும் வழங்கி, பெரிய குத்துவிளக்கும் கொடுத்து நேர்த்தியை மனமகிழ்வுடன் நிறைவுசெய்ய இருக்கின்றோம்.

-திருமதி. தயாநிதி பாலசுந்தரம் -

நீதிமன்றத்திலே ஆலயங்கள்! – பெரும்பாலான ஆலயங்கள் நீதிமன்ற விசாரணைகளில் இருக்கின்றன. மக்கள் கூடும் இடங்களில் ஆலய விபரங்களைப் பட்டியலிட்டுக் கதைக்கும் விவகாரமாக இது உயர்வடைந்து செல்கின்றது. பலவிதமான பாதிப்புக்குள்ளான சாதாரண பாமர மக்கள் ஆலயங்களுக்குச் சென்று , அழுது - தொழுது வணங்கி இறைவனிடமே தீர்வையும் ஆறுதலையும் பெறுகிறார்கள். ஆனால் பதவி நிலைகளிலுள்ளோர் ஆலயங்களை நீதி மன்றங்களில் நிறுத்துகின்றனர். இந்நிலைமையானது இறைவன் மீதுள்ள நம்பிக்கைகளை, விசுவாசத்தை, பக்தியை கேள்விக்குரியதாக்குகின்றது. இந்து மன்றங்கள், குருமார் ஒன்றியங்கள் இவ்விவகாரங்களில் ஆளுமையைப் பிரயோகிக்குமாறு அன்புடன் விரும்புகின்றோம். (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளி அம்மன் தந்த மங்கள வாழ்வு

கரவெட்டி சாமியார் அரசடியைச் சேர்ந்த திருமதி.பரமேஸ்வரி சபாரத்தினம் ஆகிய என்னுடைய குடும்பத்திற்கு ஒளியூட்டி வழிகாட்டிய செல்வ சந்நிதியான் - சந்நிதி தேர்த்திருவிழாவில் கிடைக்கப்பெற்ற "இந்து சமய அற்புதங்கள்" என்ற நூலை வாசித்த போது, அடுக்கடுக்காய் துன்பங்களை அனுபவித்து வந்த எனக்கு ஒரு வழிகாட்டி கிடைத்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. எனது மகன் தனஞ்சயன் (வயது- 39) பொறியியல் பட்டம் பெற்று கொழும்பில் பொறியியளாளராக உயர் பதவி வகித்து வந்த போதும் திருமணம் மட்டும் நீண்ட காலமாக நிறைவேறாமல் இருப்பது கவலையாக இருந்தது. ஆள் உதவி இல்லாமல் அலைந்து திரிந்து திருமணம் நடைபெறாத நிலையில் சிவகுமார் ஐயாவிடம் தொடர்பு கொண்டேன். அவர் முதலில் கூறியது "உங்களுடன் தொடர்புடைய பழைய வீடு பாழடைந்துள்ளது எனவும், அவ்வீட்டின் பின்புறம் ஒரு மரத்தின் கீழ் கவனிப்பற்று ஒரு குலதெய்வம் இருப்பதே ஆகும்.

அந்த இடம் நாங்கள் முன்பு வாழ்ந்த சம்பந்தர் கடை வீதி, கரவெட்டி. 1987ம் ஆண்டு நாங்கள் அவ்விடத்தை விட்டு அகன்று கொண்டோம். அதன் பின் எங்கள் காணியில் உள்ள நாவல் மரத்தின் கீழ் அமர்ந்துள்ள காளி அம்பாளை மறந்து விட்டோம் என்பது உண்மைதான். அடுத்து ஐயா அவர்கள் கூறியது எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. முன்னைய காலத்தில் உங்களது குலதெய்வம் அவ்விடமெல்லாம் உலாவி வந்து காவல் புரிகின்ற தெய்வமாக இருந்தார். தற்போது அவ்விடம் புற்களும், முட்களும், பற்றைகளும் படர்ந்து இருக்கின்றது. அதனால்தான் உங்களுக்கு இவ்வளவு தடைகளும், துன்பங்களும். அவ்விடத்தை துப்பரவு செய்து மீண்டும் காளி அம்பாளை பிரதிஷ்டை செய்து வழிபடுங்கள்" என்றார்.

மறுநாள் நாம் மறந்துவிட்ட எமது குலதெய்வ இருப்பிட காணிக்குச் சென்ற பொழுது சிவகுமார் ஐயா கூறியது போலவே காட்சியளித்தது. நாம் உடனடியாக ஒரு கூலியாளின் துணையுடன் அவ்விடத்தை துப்பரவு செய்து நாவல் மரத்திற்கு வழிபாடு செய்து வீட்டுக்கு வந்தபோது மகனின் நண்பனொருவன் திருமணப் பேச்சுடன் வந்து அதனை, அன்றே நிச்சயம் செய்தபோது, அருள்வாக்கின் மகத்துவத்தை உணர்ந்தோம். இதன் பின் சிலநாட்களிலேயே நாவல் மரத்தின் கீழ் சீமெந்து நிலம் போட்டு அம்பாள் சூலம் பிரதிஷ்டை செய்து பெரிய பூஜை வழிபாடுகள் செய்யத் தொடங்கினோம். அதன் பலனாக எனது மகனின் திருமணமும் இலகுவாக நிறைவேறி விட்டது. எமது குடும்பத்தின் ஆனந்தத்திற்கு எல்லையேயில்லை. மங்கள வாழ்வு தந்த எமது குலதெய்வம் காளி அம்பாளை மெருகூட்டி என்றென்றும் வழிபட்டு வருகின்றோம். தெய்வ சக்தியை விட மேலான சக்தி வேறெதுவும் இல்லை எனும் உண்மையை இப் பூமியில் நிலைநாட்டியும் பரப்பியும் வரும் சிவகுமார் ஐயாவின் பணி தொடரவேண்டும் எனப் பிராத்திக்கின்றோம்.

திருமதி.ச.பரமேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் தங்க சக்கர யோக மகாலக்ஷ்மி கோவில்

1915ஆம் ஆண்டு வேதாகம முறைப்படி அமைக்கப்பட்ட ஆன்மீக இல்லம் முன்நாள் சட்டசபை சபா நாயகர் சேர் வைத்திலிங்கம் துரை சுவாமிக்கு சொந்தமானது. இவர் பிரித்தானிய இராட்சிய தலைவர்களின் குழுவிற்கு Chairman ஆக இருந்த தமிழன் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது இல்லத்திற்கு மகாத்மா காந்தி, சுவாமி விவேகானந்தர், ஜவஹர்லால் நேரு உட்பட பல பிரசித்திபெற்ற அடியார்கள் வருகை தந்துள்ளார்கள். பரமகுரு சிவயோகர்சுவாமிகள் இந்த இல்லத்திற்கு நூற்றுக் கணக்கான முறை வந்துள்ளார். இத்தகைய பரிசுத்தம் வாய்ந்த இவ் ஆன்மீக இல்லத் தோட்டத்தில் ஒரு தெய்வீகமான பன்னீர் மரம் உள்ளது. அதனடியில் ஒரு அற்புத கல்விக்கிரகம் வீற்றிருக்கின்றது. 1960முதல் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமியின் பேரன் (Grandson) 10 வயதிலிருந்து அவர்களுடைய ஆசீர்வாதமும், இவரது விருப்பத்துக்கு இணங்க இந்தக் கல் தெய்வத்தை தரிசித்தது சிறப்பம்சமாகும். இக்கோவில் யாழ் மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் உள்ளது.

இந்த நிகழ்வுகளை ஞாபகத்தில் கொண்டு துரைசுவாமி குமரன் தங்கராஜா 2011 ஒக்டோபர் மாதம் ஐக்கிய நாடுகள் தொழில்நுட்ப ஆலோசகராக முல்லைத்தீவு பகுதியில் கடமையாற்றும் போது இந்தக்கோயிலை புதுப்பிக்கும் பணியைப் ஆரம்பித்தார். 2015ம் ஆண்டில் ஸ்ரீ மகாலக்ஷ்மியை மூலஸ்தானத்தில் அமைத்து ஸ்ரீரங்கத்தை நோக்கியவாறு விஷ்ணு பெருமான் அவதார புருஷன் யோக நரசிம்மராக வீற்றிருப்பது பாரம்பரிய சரித்திர முக்கியத்துவமாக உள்ளது. கருணைக்கும் வீரத்திற்கும் அறிகுறியாக அமையும் சக்கரத்தாழ்வார் தென்னிலங்கையை நோக்கியிருப்பது இன்னும் ஒரு சிறப்பு அம்சமாகும். பிள்ளையார், ஆஞ்சனேயர், பாலமுருகன் முதலிய கடவுள்களின் அற்புத சக்தியும் இங்கு பெருகுகின்றது. இங்கு பால்நாகம் படம்பிடித்தாடியதைக் கண்ட அடியார் சண்முகானந்தன் உஷாந்தனின் அனுபவம் 2015ல் பிரபல்யமாக தெரிவிக்கப்பட்டது. தற்போது பௌர்ணமி நாட்களில் பஜனை மற்றும் அடியார்களினால் உரு வாக்கப்படும் யாகம், மகேஸ்வர பூசை நடைபெறுவது தனித்தன்மை வாய்ந்த பெருமையாகும். இக் கைங்கரியங்களுக்கு பங்களிப்பு செய்ய விரும்புவோர் தர்மகர்த்தாவுடன் தொடர்பு கொள்ளலாம். இக்கோவில் நிர்வாகமானது இவ்வாலய திருப்பணி நிதியிலிருந்து மேலதிகமாக பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு உதவிபுரிந்து வருகின்றமை சிறப்பம்சமாகும்.

குமரன்ஜி :- aka04@hotmail.com **ச.உஷாந்தன்** 077 - 0365845
Mobile : +94 771033878

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர், ஞான வைரவப்பெருமானின் அற்புதம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட நான் சில வருடங்களாக அமெரிக்காவில் பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகின்றேன். எனது கணவர் கொழும்பு ஆட்டுப்பட்டித்தெருவில் ஆயுர்வேத மருந்து மூலிகை மொத்த வியாபார ஸ்தாபனத்தை நடாத்தி வருகின்றார். இந்து சமய அற்புதங்கள் 2014ம் ஆண்டு நூல் எனது கைக்கு நல்லூர் தேர்த்திருவிழாவில் கிடைத்தது. அந்நூலை வாசித்து மிகவும் ஆச்சரியமும் வியப்பும் அடைந்தேன். ஒவ்வொரு வருடமும் அந்நூலை வாங்கி இறை அற்புதங்களைப் படிக்க வேண்டுமென்று ஆவலாக இருக்கும். இந்நூல் ஒரு பொக்கிஷமாகும். இதற்கு தெய்வீகசக்தி இருக்கின்றது. இந்நூல் எம்மிடம் இருந்தால் வருங்கால சந்ததியினரும் இறை அருளை அறிந்து நலமாக வாழ்வர் என்பது உறுதியாகும்.

எமது மகன் Biomedical Engineering அமெரிக்காவில் மினிசோட்டா யூனிவேசிற்றியில் படித்துக்கொண்டிருந்தான். மிகவும் கெட்டிக்காரன். படிப்பு நன்றாகப் போய்க் கொண்டிருந்தது. இறுதியாண்டு படித்துக்கொண்டிருக்கும் வேளையில் பெரும் குழப்பங்கள் உருவாகியது. சில மாதங்களாக கல்வியைத் தொடர முடியாமல் இருந்தான். எமக்கும் ஏனென்று விளங்கவில்லை. மகனின் கல்விக்காகவே நானும் மகனுடன் அமெரிக்காவில் இருக்கின்றேன். எனது கணவர் கடையை நடாத்துவதற்காக கொழும்பில் இருக்கின்றார். இந்நிலையில் இரு வருடங்களாக மனக்கவலையும் துன்பங்களும் தான். சீரடி பாபா, அம்மன் , முருகன் கோவில்களுக்கு சென்று மகனுக்காக வழிபட்டு வந்தோம். 2016ம் ஆண்டு ஜனவரி மாதம் அமெரிக்காவில் இருக்கும் போது புத்தகத்தைப் படித்துவிட்டு சிவகுமாரன் ஐயாவுடன் தொ.பேசியில் தொடர்புகொண்டு எமது மகனின் நிலைமையைக் கேட்டேன். சிவகுமாரன் ஐயா எமது வீட்டிற்கு நேரில் வந்தது போல் எமது வீடு பற்றியும், சுவாமியறை, போகும் வழி, சுவாமிப்படங்கள் பற்றியும் விளக்கமாகக் கூறி நன்றாகப் படித்த பிள்ளையின் படிப்புத்தடைக்கான காரணங்களை தெளிவாகக் கூறினார். அதைக்கேட்டு பெரும் அதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம். போட்டி, பொறாமைகளால், வேண்டாத சக்திகளால் பிள்ளையின் படிப்பும் தடைப்பட்டு எமக்கும் நின்மதி இல்லாமல் போய்விட்டது. பல துன்பங்களையும் சந்தித்தோம்.

நாங்கள் ஐயாவுடன் தொடர்புகொள்ள முன்பே அம்பாள் எங்கள் வீட்டிற்கு வந்து பெரும் ஆபத்துக்கள் ஒன்றும் வராமல் எம்மைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார் என்று சிவகுமாரன் ஐயா கூறியதும், எமக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. புத்தகம் இங்கு வந்த பின்புதான் அம்பாளின் அருட்கடாட்சம் கிடைத்திருக்கிறது என்று நினைக்கின்றோம். எமது மகன் கஷ்டங்களிலிருந்து விடுபட்டு படிப்பை முடிக்க வேண்டுமென்று மனதார வேண்டி "இந்து சமய அற்புதங்கள்" நூலில் 300 டொலரையும் இணைத்து சுவாமி அறையில் வைத்தோம். மீண்டும் கல்வியைக்கற்று சித்தியடைந்தால் புத்தகத்திற்கு அற்புதம் எழுதி, அப்பணத்தை கொடுப்பதாக இருந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மகனுடன் தெய்வம் பாதுகாப்பாக எப்பொழுதும் இருக்கிறது. கவலைப்படாமல் இருங்கள். விரைவில் பரீட்சை வரவிருப்பதனால் பரீட்சையில் சித்திபெற வைப்போம் என்றும் வாக்குக் கூறினார். அத்துடன் ஐயா அனுப்பி வைத்த பூஜைத்திரவியங்களைப் பாவித்து வர மகனின் படிப்பில் முன்னேற்றம் தெரிந்தது. ஐயா கூறியபடி காரைநகர் சத்திரங்கை வீரபத்திரருக்கு தீப விளக்குக் கொடுத்து பூஜை செய்வித்தோம். எங்கள் வைரவப்பெருமானுக்கும் பொங்கல் வைத்து அதன்பின் வந்த ஒவ்வொரு நாட்களிலும் சூடமேற்றி பூஜை செய்வித்து வர படிப்படியான மாற்றங்களைக் கண்டுவந்தோம். இதேபோல் அமெரிக்காவிலுள்ள கோவில்களிலும் பூஜைகளைச் செய்தோம். இதன் பின் ஐயா சொன்ன அருள் வாக்கின்படி குழப்பமான சூழ்நிலையிலும் தெய்வங்களின் அருளினால் தொடர்ந்து படித்து மகன் 2016 வைகாசிமாதப் பரீட்சையில் பூரண சித்தியடைந்தது எமக்கு அற்புதமாகவும் ஆறுதலாகவும் இருந்தது.

எமது குல தெய்வமான வைரவப் பெருமானைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். காரைநகர் களபூமி கரப்பிட்டியந்தல ஞான வைரவர் எம் மூதாதையர் வழிபட்ட கோவிலாகும். சில காலம் இடப்பெயர்வால் கவனிப்பாரற்று இருந்தது. 2014ம் ஆண்டு இலங்கைக்கு வந்து கோவிலுக்குச் சென்ற போதும் ஆலய சுவர்களெல்லாம் பழுதடைந்த நிலையில் இருந்நது. ஐயா கூறினார் பலரும் சேர்ந்து கோவிலைக் கட்டத்தொடங்கும் போதுதான் நன்மை என்றார். எல்லோர் உதவிகளுடனும் கட்டுவதற்கு ஆயத்தமாகும் போது பல இடையூறுகள் வந்து இப்பணி தடைப்பட்டுவிட்டது. பின்பு களபூமியில் இருக்கும் Dr. நகுலேஸ்வரி ஆறுமுகம் அவர்கள் தலைமையேற்று சில அறிவுறுத்தல்கள் வழங்கி அடியவர்களின் பங்களிப்புடன் கட்டட வேலைகளை ஆரம்பித்துள்ளார். வைரவப்பெருமானின் அனுக்கிரகத்தால் கட்டட வேலைகள் தொடர்கின்றன. விரைவில் கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கிறது. நாங்களும் திருமஞ்சனக் கிணற்றுக்கான திருப்பணியை நிறைவேற்றுக்கின்றோம். பெற்றோர்களாகிய நாம் பிள்ளைகள் உள்நாட்டிலோ வெளிநாடுகளிலோ இருந்தாலும் ஆலய வழிபாடுகளைச் செய்து வரவேண்டும் என அறிவுறுத்த வேண்டும். இவ் வழிபாடுகளால் சந்ததிகளுக்கு நன்மைகள் உண்டாகும் என்பதை உணர்ந்து கொண்டதனால் இதை எழுதுகிறேன். மனக்கவலைகள், துயரங்களிலிருந்து குலதெய்வங்கள்தான் எம்மைக் காத்தருளும் என்பதில் ஐயமில்லை. தேய்பிறை அஷ்டமிகளும், மாதாந்த பரணி பூஜை வழிபாடுகளும் வைரவப் பெருமானை வழிபடுவதற்கு மிகவும் சிறந்ததாகும். நாங்கள் தொலைவில் இருந்தாலும் எமது குலதெய்வங்கள் எமக்கு அனுக்கிரகங்களை அருளி பாதுகாப்பாக இருப்பது மிகவும் அற்புதமாகும்.

இன்னனொரு அனுக்கிரகத்தையும் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். எனது கால் சத்திரசிகிச்சை செய்வதற்கு பலகாலமாக வைத்தியர்களால் திகதி நிர்ணயம் செய்தும் தடைப்பட்டு வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறை 2016ல் அமெரிக்காவில் சத்திரசிகிச்சை திகதி குறிப்பிடப்பட்டு நடைபெற இருந்த போதும் பாரிய இடையூறு ஒன்று வந்தது. சிவகுமார் ஐயா அவர்களின் ஆலோசனையினாலும், வழிகாட்டல் நேர்த்திகளினாலும் பயப்படாமல் செய்யும்படி கூறியதுடன் சத்திரசிகிச்சை நடைபெறுகின்ற காலத்தில் பல உதவிகள் கிடைக்குமென்றும் கூறிய உற்சாகப்படுத்தலில் அமெரிக்காவில் சத்திர சிகிச்சையை செய்தோம். சத்திர சிகிச்சை மிகவும் எளிதாக நடைபெற்று பல எதிர்பாராத உதவிகள் சலுகைகள் கிடைத்தன. நான் இப்போது நல்ல சுகமாக இருக்கின்றேன். எங்கள் பிரார்த்தனைகளும், தெய்வங்களின் அருளும் ஆசியும்தான்.

திருமதி.உஷாதேவி பாலசுப்பிரமணியம்

ஒற்றைக்கால் வைரவரின் அற்புதம்

எனது கணவர் சற்குணராசா அளவெட்டி மல்லாகம் ப.நோகூ. சங்கத்தில் பாதுகாப்பாளராகக் கடமைபுரிகின்றார். நாங்கள் பாடசாலை வீதி, பன்னாலை, தெல்லிப்பழையில் வசிக்கின்றோம். நானும் கணவரும் எங்களுக்கு ஓர் ஆண் குழந்தையைத் தரவேண்டுமென்று பலகாலமாக முருகனிடம் வேண்டுதலாற்றி வந்தோம். நாங்கள் செய்கிற விவசாயமும் நஷ்டத்தில் முடிகின்றது. வீட்டிலும் மிகுந்த கஷ்டம். இத்தனை துயர்களுக்குமிடையில் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு ஐயாவைத் தொடர்பு கொண்டோம். அவர் முதலில் எம்மிடம் கேட்டது, "உங்கள் வீட்டுக்கு மிக அருகில் ஒரு கோவில் இருக்கின்றது. அக்கோவிலை விட்டு தொலைதூரக் கோவில் எல்லாம் திரிகிறீர்களா. அக்கோவிலுக்கு முன்பாகவுள்ள கிணற்றில் பல கண்களையுடைய ஓட்டை வாளி தான் இருக்கிறது. முதலில் அதற்கொரு வாளி வாங்கிக் கட்டிவிட்டு, தொண்டுகளாற்றி, வணங்கியும், மற்றைய கோவில்களுக்கும் சென்று வணங்கிவர" எல்லாம் கிடைக்கும் என்று கூறினார். நாங்கள் ஐயா கூறியபடி வைரவரைப் பணிந்தோம். நாங்கள் விரும்பியபடி ஆண்குழந்தை கிடைத்தது. அந்தநேரம் நாங்கள் எங்களுக்கு குழந்தைப்பேறு கிடைத்தால் எழுதுவதாக எண்ணியிருந்தோம். குழந்தைக்கு இப்பொழுது 2 வயது நடைபெறுகின்றது. கணவருக்குத் தொழிலும் கிடைத்துவிட்டது. எங்களருகில் இருக்கும் ஒற்றைக்கால் வைரவர் என அழைக்கப்படும் சாமுண்டாதேவி சமேத ஞானவைரவப் பெருமானை தினமும் பணிகின்றோம்.

- தயார்

சற்குணராசா-

நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனேடி கிளியே இரவு பகல் காணேனடி
ஆன்மா அழியாதென்று அன்றெனக்கு சொன்ன மொழி
நான் மறந்து போவேனோடி கிளியே நல்லூரான் தஞ்சமடி
தேவன் சிறைமீட்ட செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமடி கிளியே கவலை எல்லாம் போகுமடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களின் தலைவன்.....!

(வலம்புரியில் வெளிவந்த உள்ளம்கவர்ந்த கருத்துரை)

நல்லூர் கந்தப்பெருமானின் மஹோற்சவம் என்பது ஈழத் தமிழ் மண்ணில் நடக்கும் பெருவிழா. இலட்சக்கணக்கான பக்தர்கள் கந்தப்பெருமானை தரிசிக்க நல்லூர் பதிக்கு வருகின்ற காட்சி ஒன்றே தமிழ் மண்ணுக்கு பெருமை தரக்கூடியது. உள்நாட்டில் இருக்கக்கூடியவர்கள், புலம்பெயர் உறவுகள், வெளிநாட்டவர்கள், பிறமதத்தவர்களென ஏராளமானவர்கள் மஹோற்சவத்தில் கலந்துகொள்வதன் மூலம் எங்கள் பண்பாட்டு நெறிமுறைகள் மற்றவர்களால் அறியப்படுகின்றது.

பொதுவில் உலக நாடுகள் தமது அடையாளமாக சில வரலாற்றுச் சின்னங்களை காட்சிப்படுத்திக்கொள்வது வழக்கம். உதாரணமாக சுதந்திரதேவி சிலை என்பது அமெரிக்காவை குறிப்பதற்கான அடையாளமாகும். இந்த வகையில் ஈழத்தமிழர் என்றால் அவர்களின் அடையாளம் நல்லூர்கந்தனின் திருக் கோவிலாகவே இருக்கும். அந்தளவிற்கு நல்லூர் கந்தப்பெருமானின் திருக் கோவிலும் மஹோற்சவ சிறப்பும் பக்திநிலையும் வரலாற்றுப் பெருமையோடு தொடர்புபட்டதாக உள்ளது. இவ்வாறு ஈழத்தமிழ் மக்களுக்கு பெருமை தரக்கூடியதும், பிறநாட்டவர்களும் வியந்து போற்றுகின்றதுமான நல்லூர் கந்தப்பெருமானின் மஹோற்சவ காலத்தில் புனிதத் தன்மையைப் பேணுவதிலும் எங்கள் முன்னோர்கள் மிகவும் கவனம் செலுத்தினர்.

நல்லூர் கந்தப்பெருமானை நம் தலைவனாகவும், நல்லூர் கந்தப் பெருமானின் திருவிழா தலைவனுக்கான பெருவிழாவாகவும் அதுவே தமிழ் மக்களின் அரசாட்சியாகவும் கருதப்படுகிறது. தமிழ் மக்களின் தலைவன் நல்லூர் முருகனே. அவனின் ஆலயம் தலைவனின் மாளிகை. மன்னவன் எழுந்தருளுவதால் தம் குறைகள் அனைத்தும் தீரும் என்ற மிக உன்னதமான நம்பிக்கை இன்றுவரை தமிழ் இனத்தின் இருப்புக்கு காரணமாகிறது.

உன் திருக்கோலத்தில் நாடு எதற்கு? ஊர் எதற்கு? இந்த உலகமே எதற்கு? உன் திருமுகம் காணும் பேறு ஒன்று போதாதோ என்று உள்ளம் எண்ணிக் கசிந்துருகும். அருட்தளவிற்கு உன் அலங்காரம் அடியார் மனதை ஈர்க்கும் காந்தம். அதனால் தான், **" பஞ்சம் பசி வந்தாலும் பார் எல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி கிளியே, ஆறுமுகன் தஞ்சமடி"** என்று தவத்திரு யோகர் சுவாமிகள் பாடியருளினார். பஞ்சம், பசி, வெந்தணல் எல்லாம் எங்களை திரும்பத் திரும்ப பதம் பார்த்தபோதிலும் நல்லூர் முருகா! என்ற உன் நாமம் எங்களைக் காப்பாற்றும் படைக்களமாயிற்று என்பது மறுக்கமுடியாத உண்மை. எனவே, நல்லூர் கந்தப் பெருமானின் மஹோற்சவ காலத்தில் ஆலயச் சூழலில் தெய்வீகத் தன்மையை ஏற்படுத்துவதில் நாம் ஒவ்வொருவரும் கரிசனை கொள்ளவேண்டும். நாம் எவ்வாறு நடந்துகொள்கிறோம் என்பதைப் பொருத்தே மற்றவர்களும் நடந்துகொள்வர் என்பதால், முதலில் எங்களை நாம் செம்மைப்படுத்துவது கட்டாயமானதாகும். இங்குவரும் புலம்பெயர் உறவுகள் சைவத்தமிழ் பண்பாட்டிற்குரிய ஆடைக் கலாச்சாரத்தைப் பின்பற்றுமாறு அவர்களின் உறவுகள் ஆலோசனை கூறுவதும் அவசியமாகும்...

-நன்றி வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வெளியீடு சிறப்புற மனமுவந்து நிதியளித்தோர் விபரம்

திரு. திருமதி. பாலசுப்பிரமணியம் உஷாதேவி அமெரிக்கா	100000
திரு. ந. பிரதீபன். ந. பிரசாந்தன் (U.K)	100000
நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்	50000
கிருபா லேணேர்ஸ்	25000
திரு. ந. சிவதாசன் குடும்பம் (Australia)	25000
திருமதி சுகர்ணா பிரகாஷ் (California)	20000
Dr. வித்தியாதர்சன் குடும்பம் (U.K)	15000
திருமதி ச. வேதநாயகி (Montreal)	11500
திரு. திருமதி. ராகுலன் சாளினி	11250
திரு. திருமதி. நகுலேஸ்வரன் ருசாந்தினி நீர்கொழும்பு	10000
சிவனேஸ்வரன், கற்பகமலர், சர்மிலன் (U.K)	10000
திரு. திருமதி சிவபாதசுந்தரம் சுகிர்தரெத்தினம் யாழ்ப்பாணம்	10000
சுந்தரமூர்த்தி அரவிந்த் (U.K)	9000
திரு. ஐ. விஜயகாந் (ஆசிரியர்) மானிப்பாய்	5500
சிவசிறி சோ. சந்திரசேகரக்குருக்கள் (மயிலணி)	5005
திரு N. சதீஸ்குமார் (மலாயன் கபே, யாழ்ப்பாணம்)	5000
திரு. மாணிக்கவாசகர் (U.K) (இணுவில்)	5000
திருமதி வனிதா கொட்டடி, (யாழ்ப்பாணம்)	5000
திரு. சிறிஸ்கந்தராஜா நிரோஜன் (U.K)	5000
S. ரூபாவதி, கோவில் வீதி, நல்லூர்	5000
திருமதி க. செல்வராணி (சித்தங்கேணி)	5000
திருமதி ச. பரமேஸ்வரி சாமியன் அரசடி, கரவெட்டி	5000
ஸ்ரீசாயிரக்சன் (U.K)	5000
திரு. திருமதி குலராஜன் இந்திரா ஏழாலை தெற்கு	5000
செல்வி ஜெயவாணி, அராலி வடக்கு	5000
வல்லை நாற்சந்தி நாகதம்பிரான் ஆலயம்	5000
செல்வன் T.விநோஜிதன் பண்டாரிக்குளம், வவுனியா	5000
செல்வி லோ. விதுஷா கரணவாய் தெற்கு கரவெட்டி	5000
திருமதி பாலகௌரி நடேசன் (France)	5000
திருமதி K.புவனேஸ்வரி ஆசிரியை கொக்குவில் கிழக்கு	5000
திருமதி ம. பாலசுப்பிரமணியம் ஏழாலை,வடக்கு	3000
பாலசுந்தரம் தயாநிதி குடும்பம், கோண்டாவில்	3000
திருமதி சுஜந்தி, சங்கானை	2500
செல்வன் ஐஸ்வின் (U.K)	2120
திருமதி. ச. திலகநாதன், வதிரி, கரவெட்டி	2000
திருமதி. பா. வதனி, கொட்டடி, யாழ்ப்பாணம்	2000
பத்மநாதன் குடும்பம், அராலி வடக்கு	2000
திருமதி. ச. கோடீஸ்வரன் ஆசிரியை, கொக்குவில்	2000
S.சுதர்சன் அராலி வடக்கு, வட்டுக்கோட்டை	1000
செ.விக்னேஸ்வரன், உடப்புசல்லாவ	1000
	502875

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிஸ் ஸ்ரீ விஷ்ணு துர்க்கை அம்மன் ஆலயத்தில் 23.07.2016 அன்று பறை ஒலிக்க, உருக்கை ஒலிக்க தீ மிதிப்பு நிகழ்வில் ஆலய சிவாச்சாரியார் தீயில் நடக்கும் காட்சி

சுவிஸ் – சூரிச் – ஹின்வில் துர்க்கை அம்பாள் ஆலய பிரதம குருவும் இந்நூலாசிரியர் சிவகுமாரன் அவர்களும்

இவ்வருட கதிர்காம மஹோற்சவ பாதயாத்திரைக் குழுவினர் செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து பாதயாத்திரையை ஆரம்பித்தபோது...

போஸ்கோ – நல்லூர் 021 222 0370

Digitized by Noolaham Foundation.